## விடுதலைக்குப் பின் தமிழ்க்கல்வி: பரிணாமமும் சவால்களும்

சோ. சுப்பிரமணி
மொழியியல் புலம், மலாயாப் பல்கலைக்கழகம்

### வரலாற்றுப் பின்னணி

முறைசார்ந்த கல்விச்குத் தளமாக விளங்குபவை பள்ளிகளே. அவ்வகையில், இந்நாட்டில் முறைசார்ந்த தொடக்கநிலைத் தமிழ்க்கல்வியை வழங்குபவை தமிழ்ப்பள்ளிகளே. தமிழ்ப்பள்ளிகள் முதன்முதலில் தொடுவாய்க் குடியேற்றப்பகுதிகளிளேயே (Straits Settlement) நிறுவப்பட்டன. தொடுவாய் குடியேற்ற மாநிலங்களான பினாங்கு, மலாக்கா, சிங்கப்பூர் ஆகியவற்றுள் பினாங்கிலேயே 1816-இல் ரெவரெண்டு ஹட்சிங்ஸ் (Rev. R.Hutchings) அவர்களால் முதன் முதலில் ஃபிரி ஸ்கூல் (Free School) என்ற ஆங்கிலப்பள்ளியின் ஒரு பிரிவாகத் தமிழ் வகுப்பு தொடக்கப்பட்டது. இதுவே இந்நாட்டின் முதல் தமிழ்ப்பள்ளியாகும். இருப்பினும் போதுமான ஆதரவு இல்லாததால், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இத்தமிழ் வகுப்பு மூடப்பட்டது. அதையடுத்து சிங்கப்பூரிலும், மலாக்காவிலும் கோலாலம்பூரிலும் தமிழ்ப்பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. தொடக்க காலத்தில் சமயச் சார்புடைய இயக்கங்களால் தமிழைக் கற்பிக்க நகர்ப்புறங்களிலே இப்பள்ளிகளை அமைத்துள்ளன. ஆங்கிலேய அரசால் மிகக் குறைவான பள்ளிகளே தோற்றுவிக்கப்பட்டன. அவ்வகையில் ஆங்கிலேய அரசின் முதல் முயற்சியாக, பாகான் செராய், பேராக்கில் 1900-ஆம் ஆண்டில் அரசினர் தமிழ்ப்பள்ளி நிறுவப்பட்டது. அதே ஆண்டில் சிரம்பான், மலாக்கா முதலிய இடங்களில் ஆங்கிலேய அரசால் தமிழ்ப்பள்ளிகள் நிறுவப்பட்டன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே தேயிலை, காப்பி, கரும்பு, தென்னை மற்றும் ரப்பர் தோட்டங்களில் வேலை செய்ய இந்தியாவிலிருந்து அதிகமான தொழிலாளர்கள் ஆங்கிலேயர்களால் கொண்டுவரப்பட்டனர். பதினைந்து வயதிற்கும் குறைவான பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால் 1870-ஆம் ஆண்டிற்குப் பிறகு புரவின்ஸ் வெலஸ்லி (செபெராங் பிறை), மலாக்கா, நெகிரி செம்பிலான்,

வட ஜொகூர் ஆகிய மாநிலங்களில் உள்ள தோட்டங்களில் தமிழ்ப்பள்ளிகள் உருவாயின. சீனர்களைப் போலல்லாமல், இந்தியர்கள் இப்பள்ளிகளை நிர்வகிக்கத் தோட்ட முதலாளிகளின் உதவியையும் ஆங்கிலேய அரசின் உதவியையும் நாட வேண்டி இருந்தது. ஆனால், ஆங்கிலேய அரசின் மானியம் தொடர்ச்சியாக வழங்கப்படவில்லை. கூட்டரசு மலாய் மாநிலங்களுக்கான (Federated Malay States) கல்வி கண்காணிப்பாளரான ஜே. டிரைவர் என்பவர் 1901-இல் பல்வேறு வகையான தாய்மொழிக் கல்வியை விரும்பவில்லை. குடியேற்றக் காரர்களின் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைவாக இருந்ததனால் அவர்களுக்கென தனிப்பள்ளிகள் தேவையில்லை என்ற கருத்தினை வெளியிட்டார். சீனர், தமிழர், தெலுங்கர், மலையாளியர், பஞ்சாபியர் போன்ற குடியேற்றக்காரர்களின் பிள்ளைகள் மலாய்ப்பள்ளியிலேயே பயில்வது ஏற்புடையது என அறிவித்தார்.

### இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் தமிழ்ப்பள்ளிகள்

தமிழ்ப்பள்ளிகளின் கட்டாய வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கியது 1912-ஆம் ஆண்டில் ஆங்கிலேயரால் அமல்படுத்தப்பட்ட (Labour Ordinance) தொழிலாளர் சட்டமாகும். இச்சட்டம் ஏழு முதல் பதினான்கு வயதுள்ள பத்துப் பிள்ளைகள் இருப்பின், அத்தோட்ட நிர்வாகம் கட்டாயமாகப் பள்ளிகளை நிறுவவேண்டும் என வலியுறுத்தியது. தோட்ட முதலாளிகள் வேறு

வழியின்றி பள்ளிகளை அமைத்துத்தர வேண்டிய கட்டாயச் சூழலுக்குத் தள்ளப்பட்டனர். ஒரே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் தோட்டப் பிரிவுகளிலும் *(division)* தனித்தனிப் பள்ளிகள் அமைக்கப்பட்டன. இதனால், 1920-ஆம் ஆண்டில் 122 தமிழ்ப்பள்ளிகள் இருந்தன. இப்பள்ளிகளில் ஆசிரியர்களைப் பணியில் அமர்த்துவதும் தோட்ட முதலாளிகளின் கடமையாகவே இருந்தது. தமிழ்ப்பள்ளிகள் பெயரளவிலேயே பள்ளிகளாக விளங்கின. இருப்பினும் 1920-ஆம் ஆண்டில் ரப்பர் விலை உயர்வு கண்ட போது ஆள்பலத் தேவையை நன்குணர்ந்த ஆங்கிலேயர் தோட்டங்களில் தாங்களாகவே முன் வந்து மேலும் பள்ளிகளை நிறுவினர். இது தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பிற்கு மேலும் வழி வகுத்தது. ஒருங்கிணைக்கப்பட்ட மலாய் மாநிலங்களில் 1925-ஆம் ஆண்டில் 235 தமிழ்ப்பள்ளிகள் இருந்தன. அவற்றில் 8153 மாணவர்கள் பயின்றனர். அடுத்த ஐந்து ஆண்டிற்குள் (1930) பள்ளிகளில் எண்ணிக்கை 333-ஆக உயர்ந்தது. மாணவர்களின் எண்ணிக்கையும் 12,640-ஆக உயர்வு கண்டது. தோட்ட முதலாளிகள் பள்ளிகளின் தரத்தை உயர்த்த ஒருபோதும் நினைத்ததில்லை; மாறாக இப்பள்ளிகள் அவர்களுக்கு மேலும் பணச்சுமையை அதிகரிப்பதாகவே கருதினர். தோட்ட நிர்வாகத்தால் நிறுவப்பட்ட தமிழ்ப்பள்ளிகளின் நிலை இவ்வாறிருக்க ஆங்கிலேய அரசால் 1937ஆம் ஆண்டு வரையில் 13 அரசினர் தமிழ்ப்பள்ளிகள் மட்டுமே நிறுவப்பட்டிருந்ததை அறிய முடிகிறது. இப்பள்ளிகள் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலேயே இருந்தன.

நகர்ப்புறங்களில் சமய இயக்கங்களாலும் சமூக அமைப்புகளாலும் தனிநபர்களாலும் தமிழ்ப்பள்ளிகள் நிறுவப்பட்டன. கோலாலம்பூரிலுள்ள தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளி 1905-ஆம் ஆண்டில் ராஜசூரியா அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. விவேகானந்த ஆசிரமத்தினரால் 1914-ஆம் ஆண்டு பிரிக்பீல்ட்ஸ் விவேகானந்தா தமிழ்ப்பள்ளி நிறுவப்பட்டது. செந்துலில் 1924-ஆம் ஆண்டில் கத்தோலிக்கத் திருச்சபையினரால் செயிண்ட் ஜோசப் பெண்கள் தமிழ்ப்பள்ளி நிறுவப்பட்டது. அதே ஆண்டு சன்பெங் ரோடு தமிழ்ப்பள்ளியும் நிறுவப்பட்டது. 1937-ஆம் ஆண்டு தவத்திரு சுவாமி ஆத்மாராம் அவர்களால் அப்பர் தமிழ்ப்பள்ளி நிறுவப்பட்டது. அதே ஆண்டில் பங்சார் ரோடு தமிழ்ப்பள்ளியும் நிறுவப்பட்டுள்ளது. இவ்வாறு படிப்படியான வளர்ச்சி கண்டு, 1938-ஆம் ஆண்டு 535 தமிழ்ப் பள்ளிகள் இருந்தன.

நகர்ப்புறங்களைக் காட்டிலும் தோட்டங்களில் அதிகமான தமிழ்ப்பள்ளிகள் அமைந்திருந்ததாலும், இப்பள்ளிகள் போதுமான வசதிகளைப் பெற்றிருக்கவில்லை. இப்பள்ளிகள் கோவில்களிலும் மண்டபங்களிலும் ஒரு வகுப்பறையைக் கொண்ட தற்காலிகக் கட்டடங்களிலும் அமைந்திருந்தன. இவை பள்ளிகள் என அழைப்பதற்குப் பொருத்தமற்றவையாகவே விளங்கின. தோட்ட குமஸ்தாக்களும் (கிராணிகளும்) கங்காணிகளும் மருத்துவ உதவியாளர்களும் கோவில் பூசாரிகளும் ஆசிரியர்களாகப் பணியாற்றினர். சில நகரப் பள்ளிகளில் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து பயிற்சிப் பெற்ற ஆசிரியர்கள் தருவிக்கப்பட்டனர். ஆசிரியர்களுக்கு ஊதியம் மிகக் குறைவாகவே வழங்கப்பட்டது. மாணவர்களுள் சிலர் தோட்டங்களில் பகுதி நேர வேலைகளையும் செய்து வந்தனர். நாளொன்றுக்கு இரண்டு அல்லது மூன்று மணி நேரம் மட்டுமே பாடங்கள் கற்பிக்கப்பட்டன. தமிழ் நாட்டில் உள்ள உறவினருக்குக் கடிதம் எழுதத் தேவையான அளவிற்கு அடிப்படைத் தமிழும் கணிதமும் முக்கியப் பாடங்களாகக் கற்பிக்கப்பட்டன. பாட நூல்கள் யாழ்ப்பாணத்திலிருந்தும் தமிழகத்திலிருந்தும் தருவிக்கப்பட்டன. பல்வேறு கலைத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு கற்றல் கற்பித்தல் மேற்கொள்ளப்பட்டது.

இந்நாட்டிலுள்ள இந்திய தொழிலாளிகளின் சமூக நிலையை மேம்படுத்த இந்திய அரசு நெருக்குதல் வழங்கியதோடு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்ததால் ஆங்கிலேய அரசு தாய் மொழிப்பள்ளிகளுக்கு நிதியுதவி வழங்க 1932-ஆம் ஆண்டில் சிறப்புச் செயற்குழுவை நிறுவியது. இக்குழுவின் பரிந்துரையால், மாணவர்களின் வருகைப்பதிவையும் தேர்வு முடிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு தோட்ட நிர்வாகம் ஒரு மாணவருக்கு ஆண்டொன்றிற்கு ஆறு வெள்ளியை வழங்கி வந்தது. அதன் பிறகு 1935-ஆம் ஆண்டு இத்தொகை எட்டு வெள்ளியாக உயர்த்தப்பட்டது. சில தோட்டங்களில் கள்ளுக்கடை வருமானத்திலிருந்தும் தமிழ்ப்பள்ளிகளுக்குக் கூடுதல் மான்யம் வழங்கப்பட்டது. தமிழ்ப்பள்ளிகளின் நிலையை

மேம்படுத்த 1930-ஆம் ஆண்டில் முதல் முறையாகத் தமிழ்ப்பள்ளிகளைக் கண்காணிக்கத் தமிழ் கற்ற ஆங்கிலேயரான ஜி.ஆர்.பில்வர் என்பவர் தமிழ்ப்பள்ளிகளின் ஆய்நராக (Inspectorate of Tamil Schools) நியமிக்கப்பட்டார்.

ஆங்கிலேய அரசு தாய்மொழிக்கல்விக்குச் சிறிதளவே ஊக்கமளித்திருந்த போதிலும் 1938-ஆம் ஆண்டில் தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை 535 ஆக உயர்வு கண்டது; மாணவர் எண்ணிக்கை 28,098-ஆக உயர்ந்தது. இதற்கிடையில் தமிழ்பள்ளிகளில் ஆசிரியர் தேவையை நிறைவு செய்ய 1938 -ஆம் ஆண்டு தமிழ் போதனாமுறை வகுப்புகள் (Normal Training Classes) தொடக்கப்பட்டன. சிங்கப்பூர், மலாக்கா, பினாங்கு, சிலாங்கூர், பேரா, பகாங், நெகிரி செம்பிலான் ஆகிய மாநிலங்களில் போதனாமுறை பயிற்சி மையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. பயிற்சி பெறாமல் ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்த பூசாரிகளும் கண்காணிகளும் கூட இப்போதனாமுறை வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இரண்டாம் உலகப்போரின் போது இப்பயிற்சி தடைப்பட்டது.

### ரசாக் அறிக்கையும் (Laporan Razak 1956) தமிழ்க் கல்வியும்

நாடு விடுதலை பெறும் தருவாயில், மலாய்க்காரர்களைப் பிரதிநித்த அம்னோ (United Malayan National Organaisation), மலேசியர் சீனர் சங்கம் (Malayan Chinese Association), மலேசிய இந்தியர் காங்கிரஸ் (Malayan Indian Congress) ஆகிய பல்லின கட்சிகள் ஒருங்கிணைத்த கூட்டணிக்கட்சி (Parti Perikatan) நாட்டின் முதல் பிதமர் துங்கு அப்துல் ரஹ்மான் அவர்கள் தலைமையில் உருவானது. இக்கட்சி 1955-ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றது. ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலை பெறுவதற்கு முன்னர் பல்லின மக்கள் வாழும் இந்நாட்டின் கல்வி முறையைச் சீர்செய்ய வேண்டியது ஆட்சியாளர்களின் தலையாயக் கடமையாக விளங்கியது. இச்சிக்கலைக் களைய, அப்போதைய கல்வி அமைச்சரான டத்தோ ஹஜி அப்துல் ரசாக் பின் டத்தோ ஹூசேன் அவர்களின் தலைமையில் கல்விக்குழு அமைக்கப்பட்டது. பல்வேறு இனத்தவரின் நிகராளிகள் இக்குழுவில் அங்கம் வகித்தனர். இக்கல்விக் குழுவில் சீனர்களின் நிகராளியாகக் கலந்து கொண்ட டொங் ஜியாவோ ஷொங் (Dong Jiao Zong) எனும் அமைப்பு, இந்நாட்டிலுள்ள எல்லா இனங்களின் மொழிகளும் பள்ளிகளில் பயிற்று மொழியக்கப்பட வேண்டும் எனவும் நாட்டின் அதிகாரப்பூர்வமான மொழியாகவும் விளங்க வேண்டும் எனவும் வலியுறுத்தியது. நாளடைவில் மலாய் மொழியை மட்டுமே பயிற்று மொழியாக்க வேண்டும் என எண்ணம் கொண்டிருந்த மலாய்க்காரர்களுக்கு இக்கோரிக்கை பெருஞ்சிரமத்தைத் தந்தது. இதனால், தொடக்கப்பள்ளிகளில் மலாய், ஆங்கிலம், சீனம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளையும் பயிற்று மொழிகளாக ஏற்றுக் கொள்வது என முடிவெடுக்கப்பட்டது. இக்குழு 6.5.1956 -இல் தனது அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையே ரசாக் கல்வி அறிக்கை (Laporan Razak) ஆகும்.

ரசாக் அறிக்கையின் பரிந்துரைகளின் வாயிலாக, மலாய், ஆங்கிலம், சீனம், தமிழ் ஆகிய பயிற்று மொழிகளைக் கொண்ட பள்ளிகள் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. மலாய் மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்ட பள்ளிகள் தகுநிலை தொடக்கப் பள்ளிகள் (Standard Primary School) என்றும், ஆங்கிலம், தமிழ், சீனம் ஆகிய மொழிகளைப் பயிற்று மொழியாகக் கொண்ட பள்ளிகளைத் தகுநிலை வகை தொடக்கப் பள்ளிகள் (Standard-Type Primary School) என்றும் வகைப்படுத்தப்படட்டன. அது போலவே இடைநிலைப்பள்ளிகளும் வகைப்படுத்தப்பட்டன. ஆங்கிலப் பள்ளிகளில் நாளடைவில் படிப்படியாக மலாய் மொழி பயிற்றுமொழியாக ஆக்கப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டது. மக்களிடையே ஒற்றுமையைப் பேணவும், நாட்டுப்பற்றுமிக்க மலாயா மக்களை உருவாக்கவும் எல்லா வகைப் பள்ளிகளுக்கும் பொதுவான ஒரே கலைத்திட்டம் (Curriculum) உருவாக்கப்பட்டது; மலாயாச்

சூழலையும் வரலாற்றுப் பின்னணியையும் கொண்ட பாடநூல்களின் தயாரிப்பும் பயன்பாடும் கண்டிப்பாக்கப்பட்டது.

இவ்வறிக்கையில் அடங்கியுள்ள பதினேழு பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டே 1957-ஆம் ஆண்டு கல்விச் சட்டம் (Ordinan Pelajaran 1957) உருவானது. அதே ஆண்டு 16.5.1957-இல் இக்கல்விச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இதனை அடிப்படையாக் கொண்டு பின்னர் தேசியக் கல்விக் கொள்கை (Dasar Pelajaran Kebangsaan) உருவானது.

### *ரஹ்மான் தாலிப் அறிக்கை* (Laporan Rahman Talib *1960)*

ரசாக் அறிக்கையின் அமலாக்கத்தை ஆய்வு செய்வதற்காக, 1960-ஆம் ஆண்டு, கல்வி அமைச்சரான ரஹ்மான் தாலிப் அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் ஆய்வு முடிவுகள் ரஹ்மான் தாலிப் அறிக்கை என அழைக்கப்பட்டது. ரஹ்மான் தாலிப் அறிக்கை பின்னர் 1961-ஆம் ஆண்டு கல்விச்சட்டமாக (Akta Pelajaran 1961/ Akta 43/1961) அங்கீகரிக்கப்பட்டது. இவ்வறிக்கை எல்லா வகை தொடக்கப்பள்ளிகளிலும் இலவசக் கல்விக்கு வித்திட்டது; தமிழ்ப்பள்ளிகளிலும் சீனப்பள்ளிகளிலும் மலாய் மொழி முதலாம் ஆண்டு முதல் கற்பிக்கப்பட்டது; ஆங்கிலம் மூன்றாம் ஆண்டு முதல் கற்பிக்கப்பட்டது. தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு 1967-ஆம் ஆண்டு முதல் ஐந்தாம் ஆண்டு மதிப்பீட்டுத் தேர்வு அறிமுகம் செய்யப்பட்டது. இவ்வறிக்கை மூன்றாம் படிவம் வரையில் தடையகன்ற கல்வி முறைக்கு வழிவகுத்தது. இதனால் ஒவ்வொருவருக்கும் பதினைந்து வயது வரையில் கட்டாயக் கல்வி வலியுறுத்தப்படட்டது. மூன்றாம் படிவத்தில் தேர்ச்சி அடையாதவர்களுக்கென தொழிற்கல்விப் பள்ளிகள் (Vocational Schools) தோற்றுவிக்கப்பட்டன. தமிழ் மற்றும் சீனப் பள்ளிகளின் தரம் உயர்த்தப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டது. மலாய்ப்பள்ளியிலோ ஆங்கிலப்பள்ளியிலோ பயிலும் சீன, இந்திய மாணவர்கள் எண்ணிக்கையில் பதினைந்து பேர் இருப்பின், அவர்களது பெற்றோரின் விருப்பத்தின் பேரில், இவர்களுக்குத் தாய் மொழிக்கல்வியும் (Pupils Own Language) வழங்கப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டது.

இக்கல்வி சட்டத்தில் பள்ளிகள் ரசாக் அறிக்கையில் உள்ளது போலவே வகைப்படுத்தப்பட்டன. மலாய், ஆங்கிலம், சீனம், தமிழ் ஆகிய பயிற்று மொழிகளைக் கொண்ட பள்ளிகள் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. அவற்றிற்கு வழங்கப்பட்ட பெயர்களிலும் சற்று மாற்றமிருந்தது. மலாய் மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்ட பள்ளிகள் தேசியப் பள்ளிகள் (Sekolah Kebangsaan) என்றும், ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்ட பள்ளிகளைத் தேசிய தொடக்கப் பள்ளிகள் (Sekolah Rendah Kebangsaan) என்றும், தமிழ், சீனம் ஆகிய மொழிகளைப் பயிற்று மொழியாகக் கொண்ட பள்ளிகளைத் தேசிய வகைத் தொடக்கப் பள்ளிகள் (Sekolah Rendah Jenis Kebangsaan) என்றும் வகைப்படுத்தப்படட்டன. அது போலவே இடைநிலைப்பள்ளிகளும் வகைப்படுத்தப்பட்டன.

அதே வேளையில் தமிழ், சீனப்பள்ளிகளுக்கு ஆபத்தை விளைவிக்கும் சட்ட விதிகள் 1961-ஆம் ஆண்டு கல்வி சட்டத்தில் இணைக்கப்பட்டிருந்தன. இது சீனர்களுக்கும் இந்தியர்களுக்கும் அச்சத்தையும் வேதனையையும் அளித்தது. இக்கல்விச் சட்டத்தின் பிரிவு S.21(2) இல் "கல்வி அமைச்சர் மன நிறைவு அடைவாரேயானால், அவர் கட்டளையின் பேரில் எந்த நேரத்திலும் தேசிய வகைப் பள்ளிகளைத் தேசியப் பள்ளிகளாக மாற்ற இயலும்" என்பது சேர்க்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தை நீக்க இந்தியர்களும் சீனர்களும் போராடி வருகின்றனர். இச்சட்டத்தின் உள்நோக்கம் நாளடைவில் எல்லாப் பள்ளிகளும் தேசியப் பள்ளிகளாக மாற்றம் பெற வேண்டும் என்பதுதான். இதே சட்டப்பிரிவு 1996-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தால்

அங்கீகரிக்கப்பட்ட கல்வி சட்டத்திலும் (Akta Pendidikan 1996) நிலை நிறுத்தப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**விடுதலைக்குப் பிறகு ஆசிரியர் பயிற்சி**

நாடு 1957-இல் விடுதலை அடைந்தபோது புதுக்கல்விக் கொள்கைகள் வகுக்கப்பட்டதால் தமிழ் ஏழாம் வகுப்பு தடை செய்யப்பட்டது. இருப்பினும் தமிழ் பற்றுடைய சில அதிகாரிகளின் அரும் முயற்சியால் "ஆசிரியர் ஆயத்தப் பரீட்சை" என்ற மாற்றுப் பெயரில் சில மாற்றங்களுடன் இவ்வகுப்புகள் தொடரப்பட்டன. இந்த ஆசிரியர் ஆயத்தப் பரீட்சையும் 1959-ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது. ரசாக் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருந்தவாறு தொடக்கப்பள்ளி ஆசிரியர் பயிற்சிக்கான கல்வித் தகுதி உயர்த்தப்பட்டது; குறைந்த அளவு மூன்றாண்டுகள் இடைநிலைக் கல்வித் தகுதி (Lower Certificate Of Education) வலியுறுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்தாற்போல் 1962-ஆம் ஆண்டில் போதனாமுறை வகுப்புப் பயிற்சியும் (Normal Class) நிறுத்தப்பட்டது. நாடு விடுதலை அடைந்தது முதல் நாட்டின் பல முக்கிய நகரங்களில் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கான நாள் பயிற்சி மையங்கள் (Day Training Centre) தோற்றுவிக்கப்பட்டன. கீழ்நிலைக் கல்விச் சான்றிதழ் (Lower Certificate of Education/Senior Middle lll) தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு மூன்றாண்டு பயிற்சி வழங்கப்பட்டது. தமிழாசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நோக்கில் 1960-ஆம் ஆண்டில் கோலாலம்பூர், ஜாலான் குவாந்தானில் இருந்த நாள் பயிற்சிக் கல்லூரியில் (Day Training College) முழு நேர தமிழ் ஆசிரியர் பயிற்சி தொடக்கப்பட்டது. தொடர்ச்சியாக எட்டு ஆண்டுகளுக்கு, 1967-ஆம் ஆண்டு வரையில், பயிற்சி ஆசிரியர்கள் இக்கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். இக்கல்லூரியில் 1967-ஆம் ஆண்டு முதல் மலேசியக் கல்விச் சான்றிதழ் (Malaysian Certificate of Education/Sijil Pelajaran Malaysia) தேர்வில் தேறியவர்களே பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பயிற்சிக் காலமும் இரண்டு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. இப்பயிற்சி 1968-ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகள் நடைபெற்ற இப்பயிற்சியின் வாயிலாக 331 ஆசிரியர்கள் உருவாக்கப்பட்டனர்.

இதற்கிடையில் ஆசிரியர் ஆயத்தப் பயிற்சியில் தேர்ச்சியடைந்து தற்காலிக ஆசிரியர்களாகப் பணிபுரிந்து கொண்டிருந்த ஆசிரியர்களுக்கு 1967-ஆம் ஆண்டு, தஞ்சோங் மாலிமில் உள்ள சுல்தான் இட்ரிஸ் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் மூன்றாண்டுகளுக்கு விடுமுறைக்காலப் பயிற்சி (SRT) தொடக்கப்பட்டது. பின்னர் தலைநகரிலும் இப்பயிற்சி நடத்தப்பட்டது. தொடக்கத்தில் ஆசிரியர் ஆயத்தப் பயிற்சியில் தேர்வு பெற்றோரும் மூன்றாம் படிவத்தில் நடத்தப்பட்ட கீழ்நிலைக் கல்விச் சான்றிதழ் (Lower certificate of Education/Sijil Rendah Pelajaran) தேர்வில் தேறியவரிகளும் வயது கட்டுப்பாட்டிற்குத் தளர்வு அளிக்கப்பட்டு இப்பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். பின்னர் இப்பயிற்சிக்கான தகுதி படிப்படியாக மலேசியக் கல்விச் சான்றிதழ் (Malaysian Certificate of Education/Sijil Pelajaran Malaysia) நிலைக்கு உயர்த்தப்பட்டது. இப்பயிற்சிக்குக் கடைசியாக 1979-ஆம் ஆண்டு வரையில் தற்காலிக ஆசிரியர்கள் (SRT10) சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இப்பயிற்சியும் 1981-ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது.

தமிழ்ப்பள்ளிகளில் ஆசிரியர் தேவையைக் கருத்தில் கொண்டு, ஸ்ரீ கோத்தா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி எனப் பெயர் மாற்றம் பெற்றிருந்த கோலாலம்பூர், ஜாலான் குவாந்தான் நாள் பயிற்சிக் கல்லூரியில் மீண்டும் 1976-ஆம் ஆண்டு முதல் தமிழ்ப்பள்ளிகளுக்கான பயிற்சி ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அதே காலக் கட்டத்தில் கோலாலம்பூரில் உள்ள ஜாலான் ராஜா மூடாவில் அமையப்பெற்ற ராஜாமூடா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் மற்றுமொரு தமிழாசிரியர் பயிற்சிப் பிரிவும் தொடக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இப்பிரிவு லெம்பா பந்தாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு மாற்றப்பட்டது. இக்கல்லூரியும் பின்னர் 1989-

*ஆம் ஆண்டில் மூடப்பட்டது. இதே கால கட்டத்தில் சிரம்பான் இராஜா மெலெவார் ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரி, ஈப்போ கிந்தா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, குவாந்தான் தெருந்தொம் ஆசிரியர்ப் பயிற்சிக்கல்லூரி, ஜொகூர் தெமெங்கோங் இப்ராஹிம் ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரி, ஜொகூர் முகமது காலிட் ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரி, புக்கிட் மெர்தாஜாம் ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றில் தமிழ்ப் பகுதிகள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு 1999-ஆம் ஆண்டு வரையில் எட்டு ஆசிரியர்ப்பயிற்சிக் கல்லூரிகளில் தமிழ் பயிற்றுவிக்கப்பட்டது.*

*அதன் பின்னர், 2000-ஆம் ஆண்டு முதல் சிறிய ஆசிரியர்ப்பயிற்சி கல்லூரிகளை மூடுவதென கல்வி அமைச்சு முடிவெடுத்ததால் ஸ்ரீ கோத்தா ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரி, ஈப்போ கிந்தா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, குவாந்தான் தெருந்தொம் ஆசிரியர்ப் பயிற்சிக்கல்லூரி, ஜொகூர் முகமது காலிட் ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரி ஆகிய நான்கு கல்லூரிகள் மூடப்பட்டன. இதே காலக்கட்டத்தில் குவாந்தானில் 1998-ஆம் ஆண்டு முதல் துங்கு அப்ஃசான் ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரி, தஞ்சோங் ரம்புத்தான் ஈப்போ ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி ஆகிய இரண்டு கல்லூரிகளில் புதிதாகத் தமிழ்ப்பயிற்சிகள் தொடக்கப்பட்டன. துங்கு அப்ஃசான் ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரி 2001-ஆம் ஆண்டு லிப்பிசுக்கு இட மாற்றம் பெற்றது. ஆகவே, இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மலேசியாவில் ஆறு கல்லூரிகளில் தமிழாசிரியர்ப் பயிற்சி நடைபெற்றது. கல்வி அமைச்சினால், 2006-ஆம் ஆண்டு முதல், இக்கல்லூரிகள் ஆசிரியர்க் கல்விக் கழகங்களாக (Institut Perguruan) தரம் உயர்த்தப்பட்டன.*

### *அமைச்சரவை அறிக்கையும் (Laporan Kabinet 1979) தொடக்கப் பள்ளிகளுக்கான புதிய கல்வித்திட்டமும்*

*தேசியக் கல்வி முறை அமலாக்கம், 1979-ஆம் ஆண்டு, அந்நாளைய கல்வி அமைச்சரான டாக்டர் மஹாதிர் முகமது தலைமையில் மீண்டும் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வு செய்த இக்குழு, தொடக்கப்பள்ளிகளின் கலைத்திட்டம் மாணவர்களுக்கு மிகுந்த சுமையைத் தருவதாக உள்ளதெனக் கண்டறிந்தது. மாணவர்களுக்கு அடிப்படைத் திறன்றகளான எண், எழுத்து, வாசிப்பு ஆகிய திறன்கள் வலியுறுத்தப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டது. இதற்கென மலேசியக் கல்வி அமைச்சின் கலைத்திட்ட மேம்பாட்டு மையத்தால்* (Pusat Perkembangan Kurikulum) *தொடக்கப்பள்ளிகளுக்கான புதிய கலைத்திட்டம்* (Kurikulum Baru Sekolah Rendah) *உருவாக்கப்பட்டது.*

### *தொடக்கப்பள்ளிகளுக்கான புதிய கலைத்திட்டம்* (Kurikulum Baru Sekolah Rendah)

*தொடக்கப்பள்ளிகளுக்கான புதிய கலைத்திட்டத்தில் தொடர்புதுறை, மனிதனும் சுற்றுச்சூழலும், தனி மனித வளர்ச்சி ஆகிய மூன்று பெரும் துறைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இக்கலைத்திட்டம், இம்மூன்று துறைகளின் வாயிலாக, உடல், உள்ளம், அறிவு, ஆன்மீகம் ஆகிய நான்கிலும் சம நிலை அடைவைப்பெற்ற, முழு வளர்ச்சியடைந்த மாந்தனை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. ஐந்தாம் ஆண்டு மதிப்பீட்டுத் தேர்வுக்குப்* (Ujian Penilaian Tahun Lima) *பதிலாக 1988-ஆம் ஆண்டு முதல் ஆறாம் ஆண்டு மாணவர்களுக்குத் தொடக்கப்பள்ளி மதிப்பீட்டுத் தேர்வு* (Ujian Penilaian Sekolah Rendah) *நடத்தப்படுகிறது.*

*இக்கலைத்திட்ட அமலாக்கத்தின் வாயிலாகத் தமிழ்ப்பள்ளிகள் அதிக நன்மை அடைந்தன என்றால் அது மிகையாகாது. ஏனெனில், இதற்கு முன்னர் தமிழ்மொழிக்கும் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கப்படும் மற்றப் பாடங்களுக்கும் தமிழில் பாடத்திட்டமும் பாடத்திட்ட விளக்கவுரையும் இல்லாமலேயே இருந்தது. இக்குறையை, கல்வித்திட்ட மேம்பாட்டுக் கழகத்தில் 1977-ஆம் ஆண்டு தமிழ்வழி கல்விக்காக நியமிக்கப்பட்ட கோ.கிருஷ்ணபகவான், எ. சகாதேவன், கோ. பா. குமாரசாமி ஆகிய மூன்று அதிகாரிகள்*

*களைந்ததோடு தமிழ்ப்பள்ளிகளில் முறையான கற்றல் கற்பித்தல் நடைபெற வழி வகுத்தனர். இவர்களின் அயராத உழைப்பு என்றும் நினைவில் நிறுத்தத்தக்கதாகும்.*

**தொடக்கப்பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கலைத்திட்டம் (Kurikulum Bersepadu Sekolah Rendah)**

*தொடக்கப்பள்ளிகளுக்கான புதிய கல்வித்திட்ட அமலாக்கம் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 1994-ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டது. இக்கல்வித்திட்டத்தில் இருந்த குறைபாடுகள் கண்டறியப்பட்டன. மனிதனும் சுற்றுச்சூழலும் என்ற பாடம் அறிவியல் மற்றும் புவியியல் போன்ற பாடங்களின் கலவையாக இருந்தது. இதனால், ஆறு ஆண்டு தொடக்கப்பள்ளி கல்விக்குப் பிறகு மாணவர் இடைநிலைப்பள்ளிக்குச் சென்றதும் அறிவியல் பாடத்தில் மிகவும் பின்தங்கி இருந்தது அறியப்பட்டது. ஆகவே, 1995-ஆம் ஆண்டு முதல் அறிவியல், வட்டாரக்கல்வி* (Kajian Tempatan) *எனத் தனித்தனிப் பாடங்களாகக் கற்பிக்கப்பட்டன. மீண்டும் எல்லாப் பாடங்களுக்கும் புதிய கலைத்திட்டம் தயாரிக்கப்பட்டது. இதற்குக் தொடக்கப்பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கலைத்திட்டம்* (Kurikulum Bersepadu Sekolah Rendah) *எனப் பெயரிடப்பட்டது.*

**திறப்பாட்டுப் பள்ளிகள் (Smart Schools)**

*நாட்டின் நான்காவது பிரதமர் மாண்புமிகு டத்தோ ஸ்ரீ டாக்டர் மஹாதீர் முகமது அவர்கள் நாடு 2020-ஆம் ஆண்டை அடையும் போது, எல்லாத் துறையிகளிலும் வளர்ச்சியடைந்து உலக நாடுகளுடன் போட்டியிடும் ஆற்றலைப் பெற்றிருக்கும் நிலையை அடைய வேண்டும் எனத் திட்டமிட்டார். அவரின் சிந்தனையில் உதித்ததே 2020 தொலை நோக்குப் பெருந்திட்டமாகும். இதில் முக்கிய அங்கமாக விளங்குவது பல்லூடகப் பெருவழித்* (Multimedia Super Corridor) *திட்டமாகும். இத்திட்டத்தின் ஒன்பது நோக்கங்களுள் முதன்மை வகிப்பது திறப்பாட்டுப் பள்ளிகளை* (Smart school) *உருவாக்கும் திட்டமாகும். இப்பள்ளிகளின் வழி, எதிர்கால உலகச் சவால்களை எதிர்கொள்ள, தரமிக்கப் படைப்பாற்றலும் போட்டியிடும் தன்மையும் உடைய குடிமக்கள் உருவாக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் எல்லாத் தொடக்க, இடைநிலைப் பள்ளிகளிலும் 2003-ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்டது. மாணவர் மையக் கல்வியை வலியுறுத்தும் இக்கல்வித்திட்டம் கற்றல் கற்பித்தலில் புதிய சிந்தனைகளையும் வலியுறுத்துகிறது. எல்லா அடைவு நிலையிலுள்ள மாணவர்களுக்கும் அவரவர் ஆற்றலுக்கேற்பக் கல்வி கற்பதில் வாய்ப்பும் உரிமையும்* (Democratisation of Education) *வழங்கப்படவேண்டும் என்பதையும், வாழ்க்கை முழுவதும் கல்வி* (Life Long Education) *என்பதையும் இத்திட்டம் வலியுறுத்துகிறது இதில் தகவல் தொடர்பு தொழில்நுட்பப் பயன்பாடு முக்கிய அங்கம் வகிக்கிறது.*

**தொலைநோக்குப் பள்ளிகள் (Sekolah Wawasan)**

*தொலைநோக்குப் பள்ளி திட்டம், ஒரே பள்ளி வளாகத்தில் மலாய், சீனம், தமிழ் ஆகிய மூன்று மொழி தொடக்கப்பள்ளிகளும் அமைந்திருப்பதை வலியுறுத்துகிறது. இம்மூன்று பள்ளிகளும் ஒரே சிற்றுண்டி மையத்தையும் திடலையும் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். ஒரே வளாகத்தில் இம்மூன்று பள்ளிகளும் அமைந்துள்ள போதும் அவற்றுக்கெனத் தனித்தனி தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதோடு தனித்தனி அலுவலகங்களும்*

அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்குச் சீனர்களிடமிருந்து பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. அரசாங்கமே எல்லாச் செலவையும் ஏற்றுக்கொள்ள முன்வந்த போதும், சீனர்கள் தங்களுக்கு நன்மையை விடத் தீமைகளே அதிகமாய் உள்ளன எனக் கருதுகின்றனர். இந்நாட்டில் பெரும்பாலான சீனப்பள்ளிகள் சொந்த நிலத்தில் கட்டப்பட்டுள்ளதால், இந்நிலங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் எனக் கருதுகின்றனர்; அதுமட்டுமல்லாது மூவின மாணவரிகளும் ஒன்றாகக் கலப்பதால் கட்டுப்பாடுகள் அதிகம் விதிக்கப்படுவதோடு பண்பாட்டுப் பாதிப்புகளும் அதிகம் நிகழும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றர். தமிழரைப் பொருத்த மட்டில் வாவாசான் பள்ளித் திட்டத்தால் தங்களுக்கு அரசாங்கத்தின் முழு மான்யம் பெற்று (Bantuan Penuh), எல்லா வசதிகளையும் பெற்ற பள்ளிகள் கிடைப்பதை எண்ணி மகிழ்ந்தாலும், சீனர்களைப் போல, அரசாங்கத்தின் இத்திட்டத்தில் ஏதோ உள் நோக்கம் இருக்கக்கூடும் எனவும், கால ஓட்டத்தில் தமிழ்க்கல்விக்குப் பாதிப்புகள் ஏற்படக்கூடும் எனவும் அஞ்சுகின்றனர்.

ஜொகூரில் தெலோக் செங்காட் தமிழ்ப்பள்ளி, பஹாங்கில், பீலுட் தமிழ்ப்பள்ளி, சிலாங்கூர்,பண்டார் யூ.ஸ்.ஜேயில் (USJ) 2002-ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட துன் சம்பந்தன் தமிழ்ப்பள்ளி, பேராக்கில் பூண்டுட் தமிழ்ப்பள்ளி ஆகியவை இத்திட்டத்தில் உதித்த பள்ளிகளாகும். இத்திட்டத்தினால் தமிழ்ப்பள்ளிகள் நன்மை அடைந்துள்ளன என்றே கூறவேண்டும். நவீன வடிவமைப்பில் அரசாங்கத்தால் எல்லா வசதிகளும் வழங்கப்பட்ட பள்ளிகளாக இவை திகடிசுகின்றன. இத்தகு வசதிகள் அடங்கிய தமிழ்ப் பள்ளிகளுக்கே இந்தியப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அனுப்ப ஆர்வம் காட்டுகின்றனர். தேசிய ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் வளர்ப்பதற்கு இத்தகைய பள்ளிகள் பெரும் பங்காற்றும் என அரசு நம்பிக்கை கொண்டுள்ளது.

**தேசியப் பள்ளிகளில் தமிழ்க்கல்வி**

தேசியப்பள்ளிகளில் பயிலும் இந்திய, சீன மாணவர்களுக்கு, குறைந்தது பதினைந்து பெற்றோரின் விருப்பத்தின் பேரில் தாய்மொழிக்கல்வி கற்பிக்க 1961-ஆம் ஆண்டு கல்விச்சட்டம் வழிவகுத்தது. இது மாணவர்களின் தாய்மொழிக் கல்வி (Pupils' Own Language) என அழைக்கப்படுகிறது. 1996-ஆம் ஆண்டு கல்வி சட்டத்தின் இரண்டாம் பிரிவும் (Akta Pendidikan 1996, Perkara 2) இதனையே வலியுறுத்துகிறது. தொடக்கப்பள்ளிகளில் மூன்றாம் ஆண்டு முதல் ஆறாம் ஆண்டு வரையில் ஒரு வாரத்தில் 120 நிமிடங்களுக்குத் தமிழ்மொழி அல்லது சீனமொழி கற்பிக்க இவ்விரு கல்விச் சட்டங்களும் வழிவகுத்துள்ளன. பயிற்சிப் பெற்ற ஆசிரியர் இருப்பின் பாட நேரத்திலேயே இம்மொழிப்பாடங்களைக் கற்பிக்கலாம். இவற்றை 16 நவம்பர் 2000 தேதியிடப்பட்ட KP(BS)8502/15/006/(22) என்ற கல்வி அமைச்சின் சுற்றறிக்கை மறு உறுதி செய்கிறது. இவ்வகுப்புகளில் தமிழையோ சீனமொழியினையோ கற்பிக்கும் சான்றிதழ் (Certificate) மற்றும் பட்டயத் (Diploma) தேர்ச்சி உடைய பகுதி நேர ஆசிரியர்களின் படித்தொகை ஒரு மணி நேரத்திற்கு 20 ரிங்கிட்டிலிருந்து 50 ரிங்கிட்டாக கல்வி அமைச்சால் உயர்த்தப்பட்டுள்ளது. பட்டதாரி ஆசிரியர்களின் படித்தொகை ஒரு மணி நேரத்திற்கு 25 ரிங்கிட்டிலிருந்து 60 ரிங்கிட்டாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், பணி ஓய்வு பெற்றுள்ள தமிழாசிரியர்களும் பகுதி நேரம் பணியாற்ற விரும்பும் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களும் ஆர்வத்துடன் கற்பிக்க முன்வந்துள்ளதைக் காண முடிகிறது.

தொடக்கப்பள்ளிகளுக்கான புதிய கல்வித்திட்டம் (KBSR) அமல்படுத்தப்பட்ட போது தேசியப் பள்ளிகளுக்கும் புதிய தமிழ்மொழி கல்வித்திட்டமும் உருவாக்கப்பட்டது. பயிற்சிப் பெற்ற தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களாலும் ஓய்வு பெற்ற தமிழாசிரியர்களாலும் பகுதி நேர அடிப்படையில் நடத்தப்படும் இவ்வகுப்புகள் முறையான கண்காணிப்பின்றியே நடத்தப்பட்டன. பள்ளி நிருவாகம் இவ்வகுப்புகளைப் பள்ளிப் பாட வேளையிலேயே நடத்த அக்கறை காட்டுவதில்லை. மாலை வேளையிலும் சனிக்கிழமைகளிலும் நடத்துவதால் மாணவர்கள்

*போக்கு வரத்துச் சிக்கலை எதிர்நோக்குகின்றனர். மாணவர் வருகையும் கட்டாயப்படுத்தப்பட்டதாக இல்லை. மாணவர்களின் தேர்ச்சி விவர புத்தகத்தில் தமிழ்மொழிப் பாடத்திற்கான மதிப்பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பபடுவதும் இல்லை. பள்ளியில் நடைபெறும் பல்வேறு புறப்பாட நடவடிக்கைகளில் மாணவர்கள் கட்டாயமாகக் கலந்துகொள்ள வேண்டியுள்ளதால் தமிழ்மொழி வகுப்புகள் மாணவர்களால் பறக்கணிக்கப்படுகின்றன. இதில் பெற்றோரின் அக்கறையின்மையும் முக்கியக் காரணமாகும். இதனால், பெரும்பாலும் இவ்வகுப்புகள் சில நாள்களிலேயே மூடப்பட்டு விடுகின்றன. தமிழைத் தாய்மொழியாக் கொண்டு, தமிழ்ப்பள்ளியில் பயின்று, தமிழைக் கற்பிக்கும், தமிழால் பிழைப்பு நடத்தும் ஒரு சில பெற்றோரும் கூட தங்கள் பிள்ளைகள் தமிழைக் கற்பதை விட மற்ற மொழியைக் கற்பதே மேல் என எண்ணிப் பிற மொழி வகுப்புகளுக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்புகின்றனர்.*

*அரசாங்கம் 2000-ஆம் ஆண்டு முதல் இந்திய மாணவர்களுக்கு மட்டுமல்லாது தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத எல்லா இன மாணவரிகளும் கூடுதல் மொழி எனும் அடிப்படையில்* (Bahasa Tambahan) *தமிழைக் கற்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தது; வாரத்திற்கு இரண்டு பாட வேளைகள் கற்பிக்கப்படுகிறது இதற்காக கல்வி அமைச்சின் கலைத்திட்ட மேம்பாட்டு மையம்* (Pusat Perkembangan Kurikulum) *புதிய பாடத்திட்டத்தினை வகுத்துள்ளது; பாட நூல் பிரிவும்* (Bahagian Buku Teks) *இதற்கான பாட நூல்களைத் தயாரித்துள்ளது. சீன மொழியைக் கற்பதற்கும் இவ்வாறான வசதி செய்யப்பட்டுள்ளது. ஆனால், தேசியப்பள்ளிகளில் தமிழைக் கற்பிக்க பயிற்சிப் பெற்ற முழு நேர ஆசிரியர் இல்லாததால் இவ்வகுப்புகள் நடத்தப்படுவதில் பெருஞ்சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.*

**தேசியப் பள்ளிகளில் தமிழ், சீன மொழிப்பாடங்கள்**

*மாண்புமிகு பிரதமர் டத்தோஸ்ரீ அப்துல்லா அஹ்மட் படாவி அவர்கள் 2005-ஆம் ஆண்டு தொடக்கத்தில் தேசியப் பள்ளிகளில் கால அட்டவணையில் உட்பட்ட நிலையில் தமிழும் சீனமும் கற்பிக்கப்படவேண்டும் என்ற கருத்தை முன் வைத்தார். இத்திட்டத்தை நிறைவேற்றும் வகையில் கலைத்திட்ட மேம்பாட்டு மையம் மூன்று வகையான அணுகுமுறைகளை* (Model) *அல்லது மாதிரிகளைத் திட்டமிட்டுள்ளன. முதல் அணுகுமுறையில் பள்ளி நேரத்திலேயே 5 பாட வேளைகளில் தமிழ் கற்பிக்கப்படுவது. இரண்டாவது அணுகுமுறையில் 12 பாட வேளைகளில் தமிழ் கற்பிக்கப்படுவது. இம்முறை தமிழ்ப்பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்படுவதற்கு ஈடாகும். மூன்றாவது அணுகுமுறையில் சனிக்கிழமைகளில் 5 பாட வேளையில் தமிழ் கற்பிக்கப்படுவது. முதல் அணுகுமுறைக்கும் மூன்றாவது அணுகுமுறைக்கும் புதிய பாடத்திட்டம் புதிய பாடநூலும் தயாரித்து அளிக்கப்படவிருக்கிறது. இதற்கென சிறப்பாக ஆசிரியர்கள் பயிற்றுவிக்கபடுகின்றனர். இரண்டாவது அணுகுமுறைக்கு தமிழ்ப் பள்ளிகளில் பயன்படுத்தப்படும் பாடநூல்களே பயன்படுத்தப்படவுள்ளன.*
*கடந்த 2007 முதல் சோதனை அடிப்படையில் 70 பள்ளிகளில் தமிழும் 150 பள்ளிகளில் சீன மொழியும் கற்பிக்கப்படுகிறது. அடுத்த அடுத்த ஆண்டுகளில் மேலும் பல பள்ளிகளுக்கு இம்முறை விரிவாக்கப்படவுள்ளது. இது தொடர்பான இறுதி முடிவுகள் இன்னும் வெளியிடப்படவில்லை. மலாய்க்கார மாணவரிகளும் சீனர் மாணவரிகளும் தமிழைக் கற்க ஆர்வம் காட்டினாலும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிராத இந்தியர்களின் பிள்ளைகளும் கல்வியிலும் பொருளாதார நிலையிலும் உயர்ந்துள்ள மேல் மட்டத் தமிழர்களின் பிள்ளைகளும் தமிழைக் கற்க ஆர்வம் காட்டுவார்களா? இம்மாணவர்கள் தங்கள் பெற்றோரால் ஊக்குவிக்கப்படுவார்களா? தமிழ், மற்ற இன மாணவர்களுக்கும் தமிழைப் பேச அறிந்துள்ள மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுவதைப் போல ஒரே வகையான பயிற்று முறையில் கற்பிக்கப்படுமா? போன்ற கேள்விகள் நம் முன் எழுகின்றன.*

*அரசின் இத்திடீர் மன மாற்றத்தில் மலாய்க்காரர் அல்லாதவர் களுக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாகச் சீனர்கள் இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்குவதிலிருந்து பின் வாங்குகின்றனர்*

என்றே கூறலாம். தேசியப் பள்ளிகளில் கூடுதல் பாடமாகச் சீனம் மற்றும் தமிழ் மொழி கற்பிக்கப்பட்டால் மலாய்க்காரர் அல்லாத பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைத் தேசியப்பள்ளிகளுக்கு அனுப்ப எண்ணம் கொள்ளலாம். அதனால் சீன, தமிழ்ப்பள்ளிகளின் நிலையும் பாதிக்கப்படலாம். நாடு விடுதலை அடைவதற்கு முன்பிருந்து ஒரு மொழி தொடக்கப்பள்ளிகளை உருவாக்குவதிலேயே முனைப்புக் காட்டி வரும் அரசுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப் போன்ற நிலை ஏற்பட்டுவிடும். இந்நிலையினை நன்குணர்ந்த சீனர்கள் கவனத்துடன் செயல்படுகின்றனர்.

மற்ற இனத்தவரின் தாய்மொழிக் கல்வியில் அதிக அக்கறை காட்டாத அரசு திடீரென தன் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதற்கு வேறொரு முக்கியக் காரணமும் உண்டு என உணரப்பட்டது. தற்பொழுது உள்ள சூழ்நிலையில், சீனப்பள்ளிகளில் 100,000-க்கும் மேலான சீனரல்லாத பிற இன மாணவர்கள் பயில்கின்றனர் என்பதே அவ்வுண்மையாகும். இவர்களுள் பெரும்பாலானவர்கள் மலாய்க்காரர்களே. இவ்வெண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருவதோடு சீனப்பள்ளிகளின் கல்வி முறையினையும் மலாய்க்காரர்கள் விரும்புகின்றனர் என்பதையும் அரசு உணர்கிறது. இந்நிலையை மாற்றி எல்லா மலாய்க்கார மாணவர்களையும் மற்ற இன மாணவர்களையும் தேசியப்பள்ளிகளுக்குக் கவர்வதற்கே கூடுதல் மொழிகள் என்ற பெயரில் சீனம், தமிழ், அரபு ஆகிய மொழிகள் கற்பிக்கப்படுகின்றன எனப் பலர் எண்ணுகின்றனர்.

**இடைநிலைப் பள்ளிகளில் தமிழ்க்கல்வி**

இடைநிலைப்பள்ளிகளில் புகுமுக வகுப்பு முதல் ஐந்தாம் படிவம் வரையில் குறைந்தது பதினைந்து பெற்றோரின் விருப்பத்தின் பேரில் தாய்மொழிக்கல்வி (Pupils' Own Language) கற்பிக்க 1961-ஆம் ஆண்டு கல்விச்சட்டம் வழிவகுத்தது. இதனையே 1996-ஆம் ஆண்டு கல்வி சட்டத்தின் இரண்டாம் பிரிவும் (Akta Pendidikan 1996, Perkara 2) வலியுறுத்துகிறது. ஒரு வாரத்திற்குப் புகுமுக வகுப்பிற்கு 160 நிமிடங்களும், முதலாம் படிவத்திலிருந்து ஐந்தாம் படிவம் வரையில் 120 நிமிடங்களும் கற்பிக்க இவ்விரு கல்விச் சட்டங்களும் வழிவகுத்துள்ளன. பள்ளியில் பயிற்சிப் பெற்ற ஆசிரியர் இருப்பின் பாட நேரத்திலேயே இம்மொழிப்பாடங்களைக் கற்பிக்கலாம். இதன் அமலாக்கத்தை உறுதிச் செய்ய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இவற்றை 16 நவம்பர் 2000 தேதியிடப்பட்ட KP(BS)8502/15/006/(22) என்ற கல்வி அமைச்சின் சுற்றறிக்கை மறு உறுதி செய்கிறது.

கலைத்திட்ட மேம்பாட்டு மையம் (Pusat Perkembangan Kurikulum) இடைநிலைப்பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டத்தை (Sukatan Pelajaran Bahasa Tamil KBSM) 1979-ஆம் ஆண்டு உருவாக்கியது. அரசாங்கத்தால் நடத்தப்படும், மூன்றாம் படிவத்திற்கான கீழ் இடைநிலை மதிப்பீட்டுச் சான்றிதழ் (Penilian Menengah Rendah) மற்றும் ஐந்தாம் படிவத்திற்கான மலேசிய கல்விச் சான்றிதழ் (Sijil Pelajaran Malaysia) ஆகிய தேர்வுகளில் தமிழ்மொழியும் விருப்பப்பாடமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஐந்தாம் படிவ மாணவர்கள் தமிழ்மொழியைத் தவிர, தமிழ் இலக்கியத்தையும் தேர்வு பாடமாக எடுக்கலாம். இதற்கான நூல்களை மலேசியத் தேர்வு வாரியம் (Lembaga Peperiksaan Malaysia) நிர்ணயிக்கிறது.

இடைநிலைப்பள்ளிகளில் தமிழை முழு நேரமாகக் கற்பிக்க 1987-ஆம் ஆண்டு முதல் 1993-ஆம் ஆண்டு வரையில் இடைநிலைப்பள்ளி ஆசிரியர் பயிற்சி (Kursus Perguruan Pendidikan Sekolah Menengah) நடத்தப்பட்டது. பட்டத்திற்குப் பிந்திய ஆசிரியர் பயிற்சி (Kurus Perguruan

Lepasan Ijazah) *1991-ஆம் ஆண்டு முதல் நடத்தப்படுகிறது. பட்டதாரி தமிழ் ஆசிரியர்களை உருவாக்கும் நோக்கில் 2000-ஆம் ஆண்டு முதல் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி* (Program Khas Pensiswazahan Guru) *வழங்கப்படுகிறது. இப்பயிற்சி 2007-ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டது.*

*ஒரு சில மாநிலங்களில், இந்திய மாணவர்கள் அதிகமாக இருக்கும் பள்ளிகளில் பயிற்சிப் பெற்ற முழு நேர தமிழாசிரியர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்; பாட வேளையிலேயே தமிழ் மொழி கற்பிக்கப்படுகிறது. இத்தகைய பள்ளிகளிலேயே முறையான தமிழ் கற்றல் கற்றபித்தல் நடைபெறுகிறது. இடைநிலைப்பள்ளிகளில் தமிழ் கற்றல் கற்பித்தலுக்குக் கல்வி அமைச்சு தற்பொழுது சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. தீபகற்ப மலேசியாவில் உள்ள கெடா, பினாங்கு, பேரா, சிலாங்கூர், பஹாங், நெகிரி செம்பிலான், மலாக்கா, ஜோகூர், கூட்டரசு வளாகம் (கோலாலம்பூர்) ஆகிய ஒன்பது மாநிலங்களில் இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலை மேம்படுத்தவும் கண்காணிக்கவும் 2000-ஆம் ஆண்டு முதல் தமிழ்மொழி அதிகாரிகள் (உதவி இயக்குநர்கள்) நியமிக்கப்பட்டுள்ளனர். பள்ளிகளில் தமிழ் வகுப்புகளைத் தொடங்குவதற்கு இவ்வதிகாரிகள் நிர்வாகத்தினரோடு பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.*

*தமிழைக் கற்பிக்க அனுப்பப்படும் பயிற்சிப் பெற்ற ஆசிரியர்களுக்குப் பள்ளி நிர்வாகம், பல்வேறு காரணங்களைக் காட்டி, அவ்வாசிரியர்களின் துறைசாராத பாடங்களைக் கற்பிக்கப் பணிப்பதுண்டு. இதனால், தமிழுணர்வு மிக்க ஆசிரியர்கள் கூட வேறு பாடங்களைக் கற்பிக்க வேண்டிய சூழலுக்குத் தள்ளப்படுகின்றனர். அதே வேளையில், பள்ளியில் இருக்கும் சில தமிழ் ஆசிரியர்கள் முடிந்த வரையில் தங்களை இந்தியர் என்றும் தாங்கள் தமிழில் தேர்ச்சிப் பெற்றவரென்றும் அடையாளம் காட்டிக்கொள்வதும் இல்லை. இதில் பல்கலைக்கழகம் வரையில் தமிழை முதன்மை பாடமாகப் பயின்றவரிகளும் அடங்குவர். இடைநிலைப் பள்ளிகளில் முழு நேரம் தமிழைக் கற்பிக்க வேண்டிய இவர்கள், பள்ளிச்சூழ்நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு வேறு பாடங்களைக் கற்பிக்கின்றனர். ஆனால், இவர்களுள் பலர் வேறு இடைநிலைப் பள்ளிகளில் பகுதி நேர தமிழாசிரியர்களாகப் பணியாற்றுவது விந்தையாக உள்ளது.*

*முழு நேர ஆசிரியர் இல்லாத பள்ளிகளில், தமிழும் சீனமும் பகுதி நேர ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. இவ்வாசிரியர்களுக்குப் படித்தொகை* (Allowance) *வழங்கப்படுகிறது. சான்றிதழ் மற்றும் பட்டயத் தேர்ச்சிப் பெற்ற பகுதி நேர ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் படித்தொகை மணிக்கு 20 ரிங்கிட்டிலிருந்து 50 ரிங்கிட்டாக உயர்த்தப்பட்டுள்ளது. பட்டதாரி பகுதி நேர ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் படித்தொகை மணிக்கு 25 ரிங்கிட்டிலிருந்து 60 ரிங்கிட்டாக உயர்த்தப்பட்டுள்ளது. இப்படித்தொ¦கை உயர்வு 2001-ஆம் ஆண்டு முதல் அமலுக்கு வந்துள்ளது. இவ்வுயர்வினால் அதிக எண்ணிக்கையிலான ஆசிரியர்கள் பகுதிநேர ஆசிரியர்களாகப் பணியாற்ற முன் வந்துள்ளனர்.*

*பாட நேரத்தில் வகுப்புகள் நடத்தப்படாததால் தேசியப்பள்ளிகளில் ஏற்படும் அதே சிக்கல்களே இடைநிலைப்பள்ளிகளிலும் ஏற்படுகின்றன. இவ்வகுப்புகளுக்கு மாணவர்களின் வருகை படிப்படியாகச் சரிவு காண்கிறது. சில வேளைகளில் இவ்வகுப்புகள் மூடப்படுவதும் உண்டு. தங்கள் பிள்ளைகள் தமிழைக் கற்க வேண்டும் என்பதில் பெற்றோர்களும் அதிக அக்கறை காட்டுவதாக இல்லை. தொடக்கப்பள்ளிகளில் ஆறு ஆண்டுகளுக்குத் தங்கள் பிள்ளைகள் தமிழைப் பயின்றுள்ளதால், இடைநிலைப்பள்ளியில் அவர்கள் தமிழைக் கற்க வேண்டிய அவசியம் இல்லை எனக் கருதுகின்றனர். தமிழ்பள்ளிகளிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் சராசரி 15,000 மாணவர்கள் இடைநிலைப்பள்ளிகளுக்குச் செல்கின்றனர். இவர்களுள் 50 விழுக்காட்டினர் கூட கீழ் இடைநிலை மதிப்பீட்டுச் சான்றிதழ்* (Penilian Menengah Rendah) *மற்றும் ஐந்தாம் படிவத்திற்கான மலேசியக் கல்விச் சான்றிதழ்* (Sijil Pelajaran Malaysia) *தேர்வுகளில் தமிழை ஒரு பாடமாக எடுப்பதில்லை. சரியான வழிகாட்டல் இல்லாததால் மாணவர்கள் தமிழைக் கற்பதில் காட்டும் ஆர்வத்தைக் காட்டிலும் தமிழ்மொழிக் கழகங்களின் வழி கலை*

நிகழ்ச்சிகளையும் இதர கேளிக்கை நிகழ்ச்சிகளையும் படைப்பதிலேயே அதிக ஈடுபாட்டைக் காட்டுகின்றனர்.

**தமிழ் இலக்கியப் பாடம்**

இடைநிலைப் பள்ளியின் இறுதியில் மலேசியக் கல்விச் சான்றிதழ் (Sijil Pelajaran Malaysia) தேர்வெழுதும் ஐந்தாம் படிவ மாணவர்கள் தமிழ் இலக்கியத்தை விருப்பப் பாடமாகத் தேர்வெழுதலாம். தமிழ் இலக்கியப் பாடத்திற்கான பாடத்திட்டத்தை மலேசியத் தேர்வு வாரியமே (Lembaga Peperiksaan Malaysia) முடிவு செய்கிறது. மாணவர்களின் தாய்மொழிக்கல்வி (POL) பாட வேளையில் தமிழ்மொழி மட்டுமே கற்பிக்கப்படுவதால், பெரும்பாலும் பள்ளிகளில் ஆசிரியர்களால், தமிழ் இலக்கியப் பாடம் கற்பிக்கப்படுவதில்லை. தமிழின் மீது பற்றுள்ள ஆசிரியர்கள் சிலர் தங்கள் பாட வேளைக்கு அப்பால் தம்மார்வத்தின் அடிப்படையில் அர்ப்பண உணர்வோடு இப்பாடத்தினைக் கற்பித்து வருகின்றனர். தமிழ் இலக்கியத்தைத் தேர்வுப்பாடமாகத் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 1999-ஆம் ஆண்டில் 350 ஆகக் குறைந்திருந்தது. இதனால் இப்பாடம் மலேசிய தேர்வு வாரியத்தால் தேர்வு பாடப் பட்டியலிலிருந்து அகற்றப்படும் அபாயத்தை எதிர் நோக்கியிருந்தது. இதனை நன்கு உணர்ந்த தேர்வு வாரியத்தின் தமிழ்ப் பிரிவுக்கான அதிகாரி திரு. ப. மூர்த்தி அவரிகளும் அவருக்குத் துணை நின்ற சில ஆசிரியர்களும் பெரும் முயற்சி மேற்கொண்டு இந்த எண்ணிக்கையை உயர்த்த பாடுபட்டனர். இதற்கு ஆசிரியர்களும் இந்து இளைஞர் இயக்கம் போன்ற பொது அமைப்புகளும் அயராது பாடுபட்டன. தமிழ் நெஞ்சரான உமா பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. ஆ. சோதிநாதன் அவர்கள் இலக்கியப் பாடநூல்களை அடக்க விலையிலேயே வழங்கி அரும் பணியாற்றினார். ம.இ.காவின் கல்விக் கடனுதவிப் பிரிவான MIED 2007-ஆம் ஆண்டு முதல் 2011-ஆம் ஆண்டு வரை பயன்படுத்துவதற்கான 5000 இலக்கியப் பாட நூல்கள் எல்லா மாநிலத்திலும் உள்ள மாணவர்களுக்கு இரவல் புத்தகத் திட்டமாக பகிந்தளித்துள்ளது. தேர்வு வாரியமும் மாநில அளவில் அமைந்திருந்த தமிழ்க்கல்விக் கலைத்திட்ட குழுவினரும் வழிகாட்டி நூல்களை வெளியிட்டனர். இத்தகைய அரிய கூட்டு முயற்சிகளால் 2007-ஆம் ஆண்டில் தேர்வெழுதும் மாணவர்களின் எண்ணிக்கை 4500-ஆக உயர்வு கண்டது.

**உயர்நிலைப் பள்ளியில் தமிழ்க்கல்வி (ஆறாம் படிவம்)**

ஆறாம் படிவத்தில் பயிலும் மாணவர்கள் மலேசிய உயர்கல்வி சான்றிதழ் தேர்வுக்காக (Sijil Tinggi Pelajaran Malaysia) தமிழைத் தேர்வு பாடமாக எடுக்க அனுமதிக்கப்படுகின்றனர். இப்பாடத்திற்கான கலைத்திட்டத்தை மலேசியத் தேர்வுக் கழகம் (Majlis Peperiksaan Malaysia) உறுதிச் செய்கிறது. உயர்நிலைப் பள்ளிகளில் இப்பாடம் கற்பிக்கப்படுவதில்லை. பெரும்பாலும் இப்பாடத்தினை மாணவர்கள் தங்கள் சொந்த முயற்சியிலேயே கற்றுக்கொள்கின்றனர். முழு நேர தமிழாசிரியர்களைக் கொண்ட ஒரு சில பள்ளிகளில் அவ்வாசிரியர்களின் அரிய முயற்சியால் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தமிழைத் தழைத்தோங்கச் செய்ய அர்ப்பண உணர்வோடு இந்த ஆசிரியர்கள் மேற்கொள்ளும் அரும்பணி என்றும் போற்றுதலுக்கு உரியதாகும். இவர்களைத் தவிர்த்து ஸ்ரீ முருகன் நிலையத்தாராலும், சில பொது அமைப்புகளாலும், தனி நபர்களாலும் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தேர்வுக்கான வழிகாட்டி நூலை மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறை வெளியிடுகிறது. இத்தேர்வில் தமிழில் சிறந்த புள்ளிகளைப் பெறும் மாணவர்களே பல்கலைக்கழகத்தில் தமிழைப் பயில்வதற்கு வாய்ப்பளிக்கப்படுகின்றனர். ஆறாம் படிவத்தில் தமிழைத் தேர்வு பாடமாக எழுதும் மாணவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. கடந்த 1998ஆம் ஆண்டில் 500க்கும் குறைவாக இருந்த தேர்வெழுதும் மாணவர்களின் எண்ணிக்கை 2004-ஆம் ஆண்டில் 1500 ஆக உயர்வு கண்டது.

***பல்கலைக்கழகத்தில் தமிழ்க்கல்வி***

*நாட்டில் இயங்கிவரும் பல்கலைக்கழகங்களில் மலாயாப் பல்கலைக்கழமே* (Universiti Malaya) *முதலில் தோற்றுவிக்கப்பட்டதாகும். இப்பல்கலைக்கழகம் 1949-ஆம் ஆண்டு நிருவப்பட்டது. விடுதலைக்குப் பின்னர் 1962-ஆம் ஆண்டில் முழுமையாகக் கோலாலம்பூருக்கு மாற்றப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தில் 1956-ஆம் ஆண்டு முதல், கலை சமூகவியல் புலத்தில் இந்திய ஆய்வியல் துறையின்* (JabatanPengajian India) *கீழ், தமிழ் கற்பிக்கப்பட்டு வருகிறது. தொடக்கத்தில் இந்தியாவிலிருந்து வந்த நீலகண்ட சாஸ்திரியார் சமஸ்கிருதத்தைப் பயிற்று மொழியாக்க வேண்டும் எனப் பரிந்துரைத்திருந்தார். இக்கருத்துக்குப் பெரும்பான்மையான தமிழர்களிடமிருந்து பெரும் எதிர்ப்பு கிளம்பியது. சிங்கையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்து தமிழ் முரசு நாளிதழின் ஆசிரியரான தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்களின் தலைமையில் நாடு தழுவிய நிலையில் எதிர்ப்புக் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. இறுதியில் தமிழ் பயிற்று மொழியாக அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப் பட்டது. தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்களின் தலைமையில் பல்கலைக்கழகத்தில் தமிழ் தழைக்கவும் போதுமான தமிழ் நூல்கள் இல்லாமையைப் போக்கவும் "தமிழ் எங்கள் உயிர்" எனும் நிதி திரட்டப்பட்டது. முதல் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிற்கு வித்திட்ட பெருமை இந்திய ஆய்வியல் துறைக்கும் அவ்வேளையில் அதன் தலைவராய் இருந்த பேராசிரியர் முனைவர் தவத்திரு தனிநாயகம் அடிகளையுமே சாரும்.*

*இந்திய ஆய்வியல் துறையில் தற்காலத் தமிழ் இலக்கியம், சங்க இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம், இலக்கணம் ஆகியவை கற்பிக்கப்படுவதோடு தேசிய மொழியிலும் தமிழ் இலக்கியத்தைப் பற்றியும், தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம், ஆகியவற்றைப் பற்றியும் கற்பிக்கப்படுகிறது. தொடக்கக்காலத்தில் இத்துறையில் விரிவுரையாளர்களாகப் பணியாற்ற இந்தியாவிலிருந்தே தமிழ் அறிஞர்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்களுள் குறிப்பிட்டுச் சொல்லத்ததக்கவர்கள் பேராசிரியர் தனிநாயகம் அடிகள், முனைவர் இரா. தண்டாயுதம், பேராசிரியர் முனைவர் சோ. ந. கந்தசாமி, பேராசிரியர் முனைவர் கி. கருணாகரன், முனைவர் ந. வீ. செயராமன் முதலியோராவர். அதன் பின்னர் உள் நாட்டு கல்வியாளர்களே இப்பொறுப்புகளுக்கு நியமிக்கப்பட்டனர். அவர்களுள் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவர்கள் நிறைநிலைப் பேராசிரியர் முனைவர் ச. சிங்காரவேலு, இணைப்பேராசிரியர் முனைவர் தேவபூபதி நடராஜா, இணைப்பேராசிரியர் முனைவர் க. திலகவதி, இணைப்பேராசிரியர் முனைவர் இராஜூ, இணைப்பேராசிரியர் முனைவர் இராஜாகிருஷ்ணன், இணைப்பேராசிரியர் முனைவர் சூசன் ஊர்ஜிதம், பேராசிரியர் முனைவர் ந. கந்தசாமி, பேராசிரியர் முனைவர் மு. இராஜேந்திரன், இணைப்பேராசிரியர் முனைவர் வே. சபாபதி, இணைப்பேராசிரியர் முனைவர் ம. கிருஷ்ணன், இணைப்பேராசிரியர் முனைவர் எஸ். குமரன், திரு. கோ. சிவபாலன், முனைவர். இரா. மோகனதாஸ், முனைவர் இரா. சீத்தாலெட்சுமி, முனைவர். சு. மணிமாறன் முதலியோராவர்.*

***மலாயாப் பல்கலைக்கழக மொழி, மொழியியல் புலத்தில் தமிழ்***

*மலாயாப் பல்கலைக்கழகத்தின் மொழி, மொழியில் புலத்தில் தமிழ் மொழியியலில் இளங்கலைப் பட்டப்படிப்பு 1998-ஆம் ஆண்டில் தொடக்கப்பட்டது. மொழி மையமாக இருந்ததை மொழி, மொழியியல் புலமாக மாற்றுவதில் பெரும் பங்காற்றியவர் பேராசிரியர் ஹஸ்மா ஹாஜி ஒமாராவார். இப்புலத்தின் மலேசிய மொழிகள் மற்றும் பயனாக்க மொழியியல் துறையில்* (Department of Malaysian Languages and Applied Linguistics) *தமிழ் கற்பிக்கப்படுகிறது. இதில் முதல் கட்டமாகப் பதினெட்டு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இவர்கள் அனைவருமே தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள் என்பது*

குறிப்பிடத்தக்கதாகும். இத்துறைக்கு இணைப்பேராசிரியர் முனைவர் பெ. பாலசுப்பிரமணியம் அவர்கள் முதல் தலைவராக விளங்கினார்.

இத்துறையில் தமிழ் மொழித்திறன், ஒலியியலும் ஒலியனியலும், உருபனியல், தொடரியல், மொழியும் இலக்கியமும், மொழியும் பண்பாடும், சிறப்பு நோக்கங்களுக்காகத் தமிழ், தமிழ் வட்டார வழக்கு, பனுவலாய்வியல், இரு வழி மொழியாக்கம் முதலிய பாடங்கள் தமிழில் கற்பிக்கப்படுகின்றன. இத்துறையில் 2007-ஆம் ஆண்டில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அறுபத்து ஆறாக உயர்வு கண்டது. இது ஆண்டுதோறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் காட்டுகிறது. இப்புலத்தில் தமிழைக் கற்பிக்க தொடக்கம் முதல் உள்நாட்டு விரிவுரையாளர்களே நியமிக்கப்பட்டனர். அவர்களுள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர்கள் முனைவர் பெ. பாலசுப்பிரமணியம், திரு. கி. ஸ்ரீதரன், இணைப்பேரிசிரியர் முனைவர் முல்லை இராமையா, முனைவர் இரா. கிருஷ்ணன், திரு. சோ. சுப்பிரமணி, திரு. ம. மன்னர் மன்னன் ஆகியோராவர்.

**பல்கலைக்கழகங்களில் இரண்டாம் மொழியாகத் தமிழ்**

மலேசியாவிலுள்ள புத்ரா பல்கலைக்கழகம் (Universiti Putra Malaysia), மலேசிய சபா பல்கலைக்கழகம் (Universiti Malaysia Sabah) ஆகிய இரு அரசுப் பல்கலைக்கழகங்களில் இரண்டாம் மொழியாக எளிய தமிழ் கற்பிக்கப்படுகிறது. புத்ரா பல்கலைக்கழகத்தில் 1996-ஆம் ஆண்டு முதல் வேற்று மொழிகள் துறையில் (Jabatan Bahasa Asing) தமிழ் கற்பிக்கப்பட்டு வருகிறது. முனைவர் பரமசிவம், திரு. வீரமோகன் ஆகிய இரு முழு நேர விரிவுரையாளர்கள் தமிழைக் கற்பிக்கின்றனர். இங்குத் தமிழர் மற்றும் தமிழரல்லாதார் என இரு சாராருக்கும் தமிழ் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படுகிறது.

மலேசிய சபா பல்கலைக்கழகத்திலும் தமிழ் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படுகிறது. இங்கு திரு. இரா. அருள்செல்வன் அவர்கள் 2003-ஆம் ஆண்டு முதல் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பித்து வருகின்றார். சுல்தான் இத்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசிய அறிவியல் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

**இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழ்ப்பள்ளிகளும் தமிழ்க் கல்வியும்**

மலேசியாவில் தமிழ்க்கல்வி என்ற உடனேயே நம் நினைவிற்கு வருவது தமிழ்ப்பள்ளிகளே. காரணம் தமிழ்ப்பள்ளிகளே இந்நாட்டில் தமிழ்க்கல்வியின் அடித்தளங்களாக விளங்குகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டே இடைநிலை, உயர்நிலை, பல்கலைக்கழகம் முதலிய எல்லா நிலைகளிலும் தமிழ்க்கல்வி பரிணமிக்கிறது; அதுமட்டுமன்றித் தமிழ்சார்ந்த நாளிதழ், தாளிகை, வானொலி, தொலைக்காட்சி முதலிய துறைகளின் வளர்ச்சியும் நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே, மலேசியாவில் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் நிலைத்தன்மைக்கும் இதயத்துடிப்பாக விளங்குவது தமிழ்ப்பள்ளிகளே என்றால் அது மறுக்கமுடியாத உண்மையாகும்.

**தமிழ்ப்பள்ளி மாணவர்களின் அடைவு நிலையில் உயர்வு**

தொடக்கப்பள்ளி மாணவர்களின் அடைவு நிலையை மதிப்பீடு செய்ய 1993-ஆம் ஆண்டு முதல் கல்வி அமைச்சினால் யூ.பி.எஸ்.ஆர் எனச் சுருக்கமாக அழைக்கப்படும் தொடக்கப்பள்ளிகளுக்கான மதிப்பீட்டுத் தேர்வு (Ujian Penilaian Sekolah Rendah) நடத்தப்படுகிறது. இத்தேர்வு தொடங்கப்பட்ட காலத்தில் சிறப்பாகச் செய்யாத தமிழ்ப்பள்ளிகள் படிப்படியாகச் சிறந்த நிலையை அடைந்து வருகின்றன. பின்வரும் அட்டவணைகள் இக்கருத்தினை உறுதிப்படுத்துகின்றன.

இத்தகைய உயர்வை நோக்கித் தமிழ்ப்பள்ளிகள் முன்னேறி வருவதற்குக் கல்வி, சமூக நலன் ஆராய்ச்சி அறவாரியம் (EWRF), ஸ்ரீ முருகன் நிலையம், சைல்டு நிறுவனம் முதலிய அரசு சார்பற்ற இந்திய இயக்கங்களும், தலைமை ஆசிரியர் மன்றங்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள், தமிழ்க் கல்வி அதிகாரிகள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அரசியல் அமைப்புகள் முதலிய பல்வேறு தரப்பினரின் அயராத உழைப்பும் ஊக்குவிப்பும் முக்கியக் காரணங்களாக விளங்குகின்றன. குறிப்பாக மலேசிய இந்தியர் காங்கிரஸின் (ம.இ.கா.) பங்கு அளப்பரியது என்றே கூற வேண்டும். மலேசிய இந்தியர் காங்கிரஸ் இந்நாட்டு இந்தியர்களைப் பிரநிதித்துத் தேசிய முன்னணி அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ள ஒரே அரசியல் கட்சி என்பதால் தமிழ்ப்பள்ளிகளின் மீது மிகுந்த அக்கறை செலுத்திவருகிறது. தமிழ்ப்பள்ளிகளின் தலைமைத்துவம், நிர்வாகம், கட்டட வசதிகள், மாணவர் நலன், கற்றல் கற்பித்தல் ஆகியவற்றில் மேம்பாடு காண ம.இ.கா பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு நாட்டின் குடிமக்களுக்குச் சிறந்த கல்வி கற்கும் சூழலை உருவாக்கித் தரும் முழுப் பொறுப்பும் அந்நாட்டின் அரசாங்கத்திற்கு உரியது என்றாலும் தமிழ்ப்பள்ளிகளைப் பொருத்தமட்டில் அரசின் கொள்கை மாறுபட்டதாகவே உள்ளது. தமிழ்ப்பள்ளிகள் ஏழைகள் பயிலும் வசதியற்ற பள்ளிகள் என்ற எண்ணத்தை மக்கள் மனத்திலும் பதியச் செய்யும் வகையில் அவற்றின் வசதிகள் அமைந்துள்ளன. சமூக வியூக அறவாரியம் 2000-ஆம் ஆண்டில் மேற்கொண்ட ஆய்வின்படி 100 தமிழ்ப்பள்ளிகள் மறுநிர்மாணிப்புச் செய்யப்படவேண்டிய நிலையில் உள்ளன எனக் கண்டறியப்பட்டுள்ளது. மோசமான நிலையில் உள்ள பள்ளிகளை மறுநிர்மாணிப்புச் செய்ய ம.இ.கா. அயாராது பாடுபட்டு வந்தாலும் அது போதுமானதாக இல்லை என்றே கூறலாம். இப்பணிகளை அரசாங்கமே செய்வது சாலச் சிறந்ததாகும்.

**தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்குச் சமூகத்தின் ஊக்குவிப்பு**

தமிழ்ப்பள்ளி மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கச் செய்யும் பொருட்டுப் பல்வேறு சமூக அமைப்புகள் அக்கறை காட்டத்தொடங்கின. கல்வி, சமூக நலன் ஆராய்ச்சி அறவாரியம் (EWRF) தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கு வழிகாட்டி வகுப்புகளையும் இடைநிலைப்பள்ளி வரையில் அம்மாணவர்கள் சிறந்த நிலையில் கல்வியைத் தொடரத் தத்தெடுக்கும் திட்டத்தையும் மேற்கொண்டு வருகிறது, ஸ்ரீ முருகன் நிலையம் இந்திய மாணவர்களுக்குப் பிரத்தியேக வகுப்புகளை நடத்தி வருகிறது, சைல்டு நிறுவனம் தமிழ்ப்பள்ளி மாணவர்களின் தொடர்ச்சியான கல்வி மேம்பாட்டில் பல்வேறு வகையில் கவனம் செலுத்தி வருகிறது. இவற்றைத் தவிர, தேர்வில் சிறந்த புள்ளிகளைப் பெறும் மாணவர்களைப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களும் தமிழ் இளைஞர் மணிமன்றம், மலேசிய இந்துதர்ம மான்றம், மலேசிய திராவிடர் கழகம் போன்ற பொது இயக்கங்களும் தேசிய நில நிதி கூட்டுறவுச் சங்கம், நேசா முதலிய நிறுவனங்களும் அரசியல் கட்சிகளும் பாரட்டிச் சிறப்புச் செய்கின்றன. அம்மாணவர்களுக்குப் பல்வேறு வகையில் ஊக்குவிப்பை வழங்குகின்றன. கடந்த 2003-ஆம் ஆண்டு முதல் ம.இ.கா யூ.பி.எஸ்.ஆர் தேர்வில் 7A பெறும் ஒவ்வொரு தமிழ்ப்பள்ளி மாணவருக்கும் RM500-யையும் அப்பள்ளிக்கு நினைவுப்பரிசினையும் வழங்கி ஊக்குவித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு செய்வது தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்குப் பெரும் ஊக்குவிப்பாக அமைவதோடு சமூகம் தமிழ்ப்பள்ளிகளின் மீது காட்டும் அக்கறையையும் புலப்படுத்துகிறது.

**தகவல் தொடர்பு ஊடகங்களின் அளப்பரிய பங்கு**

சமூகத்தினரிடையே தமிழ்ப்பள்ளி மற்றும் தமிழ்க்கல்வி பற்றிய விழிப்புணர்ச்சியையும் பற்றினையும் ஏற்படுத்துவதில் தமிழ்சார்ந்த தகவல் தொடர்பு ஊடகங்களான வானொலி,

*தொலைக்காட்சி, நாளிதழ்கள், தாளிகைகள் ஆற்றிவரும் பெரும் பங்கு பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியதாகும். தமிழ்ப்பள்ளிகளின் மோசமான நிலையை மட்டுமே படம் பிடித்துக் காட்டி வந்த தகவல் தொடர்பு ஊடகங்கள் தமிழ்ப்பள்ளி மாணவர்களின் சிறந்த அடைவுநிலையைப் பற்றியும் தமிழைக் கற்பதால் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும் தமிழ்ப்பள்ளிகளின் பல்வேறு சிறப்புகளைப் பற்றியும் மக்களுக்கு அறிவிக்கின்றன. தமிழ்ப்பள்ளிகளில் பயின்று பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை முடித்த மாணவர்களைப் பற்றியும் சமூகத்தில் உயர் பொறுப்புகளை வகிப்பவர்களைப் பற்றியும் பொருளாதாரத்தில் உயரவடைந்தவர்களைப் பற்றியும் செய்திகளை வெளியிடுகின்றன. இவை தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்குப் பெரும் ஊக்கத்தை அளித்து வருவதோடு மக்கள் மத்தியில் தாய்மொழிப் பற்றும் விழிப்புணர்ச்சியும் நம்பிக்கையும் ஏற்பட வழிவகுத்து வருகிறது. இதனால் தமிழ்ப்பள்ளிகளுக்கு உதவ பல பொது அமைப்புகளும் தனி நபர்களும் முன் வருகின்றனர்.*

***தமிழ்ப்பள்ளிகளின் தேசிய நடவடிக்கை மன்றம் அமைப்பு***

*தமிழ்ப்பள்ளிகள் எதிர்நோக்கும் பல்வேறு சிக்கல்களை விவாதித்துத் தீர்வு காணவும் தமிழ்ப்பள்ளிகளின் மேம்பாட்டிற்கான திட்டங்களைத் தீட்டி அமல்படுத்துவதற்கும் தமிழ்ப்பள்ளிகளுக்கான தேசிய நடவடிக்கை மன்றம்* (Majlis Bertindak Kebangsaan Bagi Sekolah-Sekolah Tamil) *ம.இ.காவின் தேசியத் தலைவரும் பொதுப்பணி அமைச்சருமாகிய மாண்புமிகு டத்தோஸ்ரீ ச.சாமிவேலு அவர்களால் 2000-ஆம் ஆண்டு மே மாதம் 14-ஆம் நாள் அமைக்கப்பட்டது. இத்தேசிய நடவடிக்கை மன்றத்திற்கு மாண்புமிகு டத்தோ முனைவர் த. மாரிமுத்து அவர்கள் தலைவராகவும் பேராசிரியர் முனைவர் என். எஸ்.இராஜேந்திரன் அவர்கள் செயலாளராகவும் நியமிக்கப்பட்டனர். இம்மன்றத்தின் செயலகமாக சமூக வியூக அற வாரியம் செயல்பட்டு வருகிறது. இம்மன்றத்தில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பள்ளிகளின் ஆய்நர்கள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர்கள், தலைமை ஆசிரியர் மன்றப் பொறுப்பாளர்கள், மலாயா தமிழாசிரியர் சங்கப் பொறுப்பாளர்கள், தேசிய ஆசிரியர் பணியாளர் சங்கப் பொறுப்பாளர்கள், பாடத்திட்ட மேம்பாட்டு மைய அதிகாரிகள், தேர்வுக்கழக அதிகாரிகள், தமிழ்ப்பள்ளிகளுகான தலைமை அமைப்பாளர், மாநில தமிழ்மொழி உதவி இயக்குநர்கள், மாநில தமிழ்ப்பள்ளி அமைப்பாளர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக விளங்கி வருகின்றனர். ஆகவே, பல்வேறு நிலைகளில் தமிழ்க்கல்வி சார்புடைய அனைவரும் கூடித் தமிழ்க்கல்வி மேம்பாட்டிற்கு ஆக்கமிகுக் கருத்துகளை முன்வைக்கவும் விவாதிக்கவும் மிகச்சிறந்த அரங்கமாக இத்தேசிய மன்றம் விளங்குகிறது. கல்வி அமைச்சின் எல்லாப் பிரிவுகளிலும் பணியாற்றும் அதிகாரிகள் சந்தித்துக்கொள்வதால் தமிழ்ப்பள்ளிகளின் எல்லாச் சிக்கல்களையும் விவாதித்து நடவடிக்கைகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்த இத்தேசிய மன்றம் ஓர் ஆக்கமிகுக் களமாக விளங்கி வருகிறது.*

*இம்மன்றம் 2000-ஆம் ஆண்டில் தமிழ்ப்பள்ளிகளின் நிலை குறித்து ஒரு விரிவான ஆய்வினை மேற்கொண்டது. இந்த ஆய்வில் பெறப்பட்ட விவரங்களைக் கொண்டு "இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழ்ப் பள்ளிகளுக்கான முதன்மை செயல்திட்டம்"* (Pelan Induk Sekolah-Sekolah Tamil Abad ke-21) *தயாரிக்கப்பட்டு அந்நாளில் கல்வி அமைச்சராக விளங்கிய டான்ஸ்ரீ மூசா முகமது அவர்களிடம் வழங்கப்பட்டது.*

*தமிழ்ப்பள்ளி மாணவர்களின் யூ.பி.எஸ்.ஆர் தேர்ச்சி நிலையை உயர்த்த 2003-ஆம் ஆண்டு முதல் இம்மன்றம் தமிழ்க் கட்டுரை, தமிழ்க் கருத்துணர்தல், மலாய்க் கட்டுரை, மலாய்க் கருத்துணர்தல், ஆங்கிலம், அறிவியல், கணிதம் ஆகிய ஏழு தேர்வு பாடங்களுக்கும் பயிற்சி நூல்களைத் தயாரித்து, ஒவ்வொரு பாடத்திற்கும் 15,000 பயிற்சி நூல்களை அச்சிட்டு எல்லா ஆறாம் ஆண்டு மாணவர்களுக்கும் வழங்கி வருகிறது.*

இவற்றைத் தவிர தமிழ்ப்பள்ளித் தலைமையாசிரியர்களின் தலைமைத்துவ ஆற்றலை மேம்படுத்தவும் தமிழ்ப்பள்ளிகளில் ஏற்படும் சிக்கல்களை நேரடியாகக் கண்டறிந்து விவாதித்துத் தீர்வு காணவும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தேசிய நிலையிலான பயிலரங்குகளையும் இம்மன்றம் நடத்தி வருகிறது.

***அறிவியல், கணிதப் பாடங்களை ஆங்கிலத்தில் கற்பித்தல்***

*நாடு விடுதலை அடைவதற்கு முன்பிருந்தே கூட்டணி அரசாங்கம் குறிப்பாக அம்னோ அல்லது மலாய்க்காரர்கள் மலாய் மொழியைப் பள்ளிகளில் முதன்மையான பயிற்று மொழியாக்கப் பெரும் முனைப்புக் காட்டினர். படிப்படியாகப் தொடக்கப்பள்ளிகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரையில் ஆங்கிலத்தில் கற்பிக்கப்பட்ட அறிவியல், கணிதம் முதலிய அனைத்துப் பாடங்களும் தேசிய மொழியான மலாய் மொழியில் கற்பிக்கப்பட்டன. ஆனால், தமிழ்ப்பள்ளிகளிலும் சீனப்பள்ளிகளிலும் தத்தம் மொழிகளிலேயே பாடங்கள் கற்பிக்கப்பட்டு வந்தன.*

*இத்தகைய சூழ்நிலையில் சற்றும் எதிர்பார்க்காத வண்ணம் நாட்டின் முன்னாள் பிரதமர் துன் டாக்டர் மகாதிர் அவர்கள் தேசியப்பள்ளிகளில் கணிதம், அறிவியல் பாடங்களை 2003-ஆம் ஆண்டு முதல் ஆங்கில மொழியில் கற்பிப்பதே சிறப்பு என்ற கருத்தினை 10.5.2002-இல் முன் வைத்தார். உலகமயச் சவால்களை எதிர்கொள்வதற்கு உலக மொழியான மலாய் மொழியில் மலாய்க்காரர்கள் சிறந்து விளங்குவது அவசியமாகும் எனக் கருதினார். பரவலாக மலாய்மொழிப் பற்றாளர்களிடமிருந்து எதிர்ப்புகள் கிளம்பினாலும் மலாய்க்காரர்கள் உலகில் மற்ற இனங்களோடு போட்டியிடும் ஆற்றலைப் பெற வேண்டுமெனில் இவ்வாறு செய்வது அவசியமாகும் என்பதை வலியுறுத்தினார். இக்கருத்தினைப் பெரும்பான்மையான மலாய்க்காரர்கள் ஏற்றுக்கொண்டனர் என்றே கூற வேண்டும். இது அரசின் மொழிக்கொள்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது என்றே கூற வேண்டும்.*

*முதலில் இந்த முடிவினைக் கண்ணுற்ற இந்தியர்களும் சீனர்களும் அரசாங்கம் தமிழ், சீனப்பள்ளிகளைப் பற்றி கவலைப்படவில்லை என வருத்தத்தைத் தெரிவித்தனர். தகவல் துறை ஊடகங்களில் இதைப் பற்றிப் பரவலாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இந்தக் குறைக் கூறல்களைக் கண்ணுற்ற அரசு தமிழ், சீனப்பள்ளிகளிலும் இக்கொள்கை அமல்படுத்தப்படும் என அறிவித்தது. ஆனால், இது அமல்படுத்தப்படுவதற்கு முன்னர் அந்தந்த இனங்களின் கருத்துகள் கண்டறியப்படும் எனக் கல்வி அமைச்சர் டான்ஸ்ரீ மூசா முகமது அவர்கள் 7.8.2002-இல் அறிவித்திருந்தார்.*
*இந்தியர்களைக் காட்டிலும் சீனர்களிடமிருந்து அதிகமான எதிர்ப்புகள் வெளிப்பட்டன. சீன ஆசிரியர்களின் தேசிய சங்கமான ஜியாவோ சொங்* (Jiao Zong), *சீனப்பள்ளிகளின் தேசிய சங்கமான டொங் சொங்* (Dong Zong), *தேசிய சீனர் சபை* (Chinese Assembly Hall), *தேசிய சீனப்பள்ளிகளின் தலைமையாசிரியர் சங்கம் ஆகிய நான்கு வலிமை மிக்க அமைப்புகள் அறிவியல், கணிதம் ஆகிய பாடங்கள் முற்றிலும் ஆங்கிலத்தில் கற்பிப்பதற்கான பரிந்துரையை வன்மையாக எதிர்த்தன. இதனால் மலேசிய சீனர் சங்கம்* (MCA), *கெராக்கான் ஆகிய சீனர்களின் அரசியல் கட்சிகள் அரசிற்கு முடிவினை அறிவிப்பதில் காலம் தாழ்த்தின.*

*ஆனால், தமிழ்ப்பள்ளிகளைப் பொருத்த மட்டில் நிலைமை சற்று மாறுபட்டிருந்தது. இது தொடர்பாக முடிவெடுப்பதற்குப் பெரும்பான்மையான இந்தியர்களைப் பிரதிநிதித்து அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ம.இ.கா கடந்த 10.8.2002-இல் கோலாலம்பூரில் உள்ள புத்ரா உலவ வாணிப மையத்தில் நாட்டிலுள்ள 524 தமிழ்ப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்குமான தேசிய ஆய்வரங்கத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது. பல்வேறு விவாதங்களுக்குப் பின்னர் அரசின் அப்பரிந்துரையை ஏற்றுக் கொள்வதாக முடிவெடுக்கப்பட்டது. இது தமிழ்க்கல்வி வரலாற்றில் மிகவும் முக்கியமான முடிவாகக் கருதப்படுகிறது. இம்முடிவிற்குச் சைல்டு நிறுவனம்,* EWRF, *மலேசியத் தமிழ்க்கல்வி ஆய்வு*

*மேம்பாட்டு அறவாரியம், செம்பருத்தி மாத இதழ் ஆகியவை பலத்த எதிர்ப்புகளைத் தெரிவித்தன. 'உலகளாவிய நிலையில் கல்வியில் உளவியலாளர்களும் மொழியியலாளர்களும் எந்தப் பாடத்தையும் தாய்மொழி வழிக் கற்பதாலேயே மாணவர்கள் எளிதில் கற்க இயலும் எனக் கருத்து தெரிவித்துள்ள வேளையில் நாம் ஏன் வேற்று மொழியில் கற்க வேண்டும்?' என்ற வினாவினைத் தொடுத்தனர். அது மட்டுமல்லாது தமிழ்ப்பள்ளிகள் காலப்போக்கில் படிப்படியாக வேற்றுமொழிப் பள்ளிகளாக மாற்றம் அடைவதற்கு நாமே வழி வகுத்துக் கொடுக்கிறோம் என்ற அச்சத்தை வெளிப்படுத்தினர். இவ்வாறான முடிவு எடுப்பதற்கு முன்னர்ப் பரவலாகக் கலந்தாலோசித்துக் கருத்தறியவில்லை எனக் குறைகூறினர்.*

*இந்தியர்கள் தங்கள் கருத்தை அறிவித்த ஏறக்குறைய ஒரு மாதத்திற்குப் பிறகே சீனர்கள் தங்கள் முடிவை அறிவித்தனர். சீனப் பள்ளிகளில் அறிவியல், கணிதம் ஆகிய பாடங்களை ஆங்கிலம் சீனம் ஆகிய இரு மொழிகளிலும் கற்பிப்பதென முடிவெடுக்கப்பட்டது. பள்ளி நேரத்தில் ஆங்கில மொழியிலும் பாட நேரத்திற்கு அப்பால் கூடுதல் நேரத்தில் சீன மொழியிலும் இவ்விரு பாடங்களையும் தாங்கள் கற்பிக்க உள்ளதாக அறிவித்தனர். அரசு இவர்களின் முடிவினை ஏற்றது. சீனர்கள் இவ்வாறு முடிவெடுப்பதற்குப் பல்வேறு காரணங்கள் கற்பிக்கப்படுகின்றன. இவ்விரு பாடங்களும் ஆங்கிலத்தில் மட்டுமே கற்பிக்கப்படுமானால் எதிர்காலத்தில் இளைய தலைமுறையினரிடையே மண்டரின் மொழி (சீனமொழி) அறிவியல், கணித மொழியாக விளங்கும் வாய்ப்பினை இழக்கும். இதனால் தனியார் சீன இடைநிலைப்பள்ளிகளில் மண்டரின் மொழியில் கற்பிக்கப்படும் அறிவியல், கணிதப் பாடங்கள் முற்றாக இல்லாமல் போகலாம். இது சீனமொழி வளம் குன்றி, அறிவியல் தொழில் நுட்ப மொழியாக விளங்காமல் போக வழி வகுக்கும் என அஞ்சினர். இதை விட, அவர்கள் கொண்டிருந்த பேரச்சம் என்னவெனில், வேற்று மொழிகளில் அதிகமான பாடங்கள் கற்பிக்கப்படுமானால் சீனர்கள் தங்கள் பண்பாட்டுக்கூறுகளை வெகுவாக இழக்க நேரும் என்பதாகும். மற்ற எந்தக் கூறுகளைக் காட்டிலும் சீனர்களை இறுக்கமாகப் பிணைத்து வைத்திப்பது அவர்களின் மொழியும் பண்பாடுமேயாகும். இவற்றை இழப்பார்களேயானால் இனம் அழியும் என ஆணித்தரமாக நம்பினர். அதோடு வேற்று இன ஆசிரியர்களும் இப்பாடங்களைக் கற்பிப்பதற்கு அனுப்பப்படலாம். இதனால் சீனர்களின் வேலை வாய்ப்பும் குறைய நேரலாம் எனவும் அஞ்சினர்.*

*தமிழ்ப்பள்ளிகளில் அறிவியல், கணிதம் ஆகிய பாடங்கள் ஆங்கிலத்தில் கற்பிக்கப்படுவதற்கு முன்னர் அரசு 12 நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும் ம.இ.கா ஏற்பாடு செய்திருந்த ஆய்வரங்கத்தில் முன்வைக்கப்பட்டது. அந்நிபந்தனைகளுள் முக்கியமான ஐந்து நிபந்தனைகள் பின்வருமாறு:*

- *(i)* *1996ஆம் ஆண்டு கல்விச் சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது போல் தமிழ்ப்பள்ளிகளின் தனிப் பண்புகள் பாதுகாக்கப்பட வேண்டும்.*
- *(ii)* *தொடக்கப்பள்ளிகளில் தமிழ்மொழிக்கான கால அட்டவணையில் ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தை மேலும் குறைக்கக் கூடாது.*
- *(iii)* *தமிழ்ப்பள்ளிகளில் தமிழாசிரியர்களின் எண்ணிக்கையைக் குறைக்கக்கூடாது.*
- *(iv)* *கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களை ஆங்கிலத்தில் போதிப்பதற்குத் தமிழ் அறிந்த தமிழாசிரியர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும்.*
- *(v)* *ஆங்கிலம், கணிதம், மலாய் மற்றும் அறிவியல் பாடங்களைத் தவிர மற்ற பாடங்கள் அனைத்தும் தமிழ்மொழியில் மட்டுமே போதிக்கப்படவேண்டும்.*

*ஆனால், இந்நிபந்தனைகள் யாவற்றிற்கும் அரசிடமிருந்து எழுத்துப்பூர்வமாக எந்தவொரு உத்தரவாதக் கடிதமும் பெறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

***தமிழ்ப்பள்ளி மாணவர் எண்ணிக்கை உயர்வு***

*தமிழ்ப்பள்ளியின் மேம்பாட்டின்பால் சமூகம் காட்டும் அக்கறையாலும் பல்வேறு உதவிகளாலும் ஊக்குவிப்புகளாலும் தமிழ்ப்பள்ளிகளில் எல்லா நிலைகளிலும் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து வருவதை நன்கு உணர முடிகின்றது. குறிப்பாக கற்றல் கற்பித்தல் சூழல்களில் நிகழ்ந்துவரும் வளமிக்க மாற்றங்கள் மாணவர்களின் ஆளுமையையும் கற்றல் அடைவு நிலைகளையும் மேம்படுத்தி வருவதைக் கண்கூடாகக் காண முடிகிறது. மொழிப் பற்றும் இன மான உணர்வும் அர்ப்பண உணர்வும் மிக்க ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் முதலியோர் பள்ளியின் நலனுக்காக அயராது பாடுபடுவதைக் கண்கூடாகக் காணமுடிகிறது. இவையனைத்தும் மாணவர்கள் எண்ணிக்கை உயர்வதற்கு வழி வகுத்துள்ள என்பதைப் பின்வரும் அட்டவணை உறுதிப்படுத்துகிறது.*

*அட்டவணை 3: ஆண்டுகளின் அடிப்படையில் மாணவர் எண்ணிக்கை*

| ஆண்டு | மாணவர் எண்ணிக்கை | ஆண்டு | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| *1999* | *91,620* | *2004* | *95,242* |
| *2000* | *89,175* | *2005* | *98,579* |
| *2001* | *89,943* | *2006* | *101,972* |
| *2002* | *88,036* | *2007* | *105,518* |
| *2003* | *90,175* | *2008* | *07,761* |

*மூலம்: சமூக வியூக அறவாரியம்*

*இவ்வட்டவணையைக் காணும்போது 1999-ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாகச் சரிவு கண்ட மாணவர் எண்ணிக்கை 2003-ஆம் ஆண்டு முதல் உயர்வு கண்டு வருவதைக் காண முடிகிறது. இவ்வுயர்வு இயல்பான மக்கள் பெருக்கத்தால் ஏற்பட்டுள்ளதா அல்லது மக்களின் மன மாற்றத்தால் ஏற்பட்டுள்ளதா என்பதை முறையான ஆய்வுக்குப் பின்னரே கூற முடியும். நாளிதழ்களில் வெளிவந்த செய்திகள் தமிழ்ப்பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை உயர்ந்திருப்பதைக் குறிப்பிட்டுள்ளதோடு அவ்வுயர்வுக்கான காரணங்களைப் பற்றியும் ஓரளவு விளக்கியுள்ளன. "தமிழ்பள்ளிகளில் முதலாம் ஆண்டு மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. நாடு முழுவதும் உள்ள தமிழ்ப்பள்ளிகள் ஜனவரி 2, 3 தேதிகளில் திறக்கப்பட்ட போது பெரும்பாலான தமிழ்ப்பள்ளிகளில் குறைந்தது 30 மாணவர்கள் வரையிலும் முதலாம் ஆண்டில் சேர்ந்துள்ளனர் என்று மலாயாத் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள் சங்கச் செயலாளர் திரு.பி. தர்மலிங்கம் சொன்னார்.*

*இந்த ஆண்டு (2005) நாடு முழுவதும் உள்ள 524 தமிழ்ப்பள்ளிகளில் புதிதாக முதலாம் ஆண்டில் சுமார் 18 ஆயிரம் மாணவர்கள் சேர்ந்துள்ளதாகத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. மருத்துவர், வழக்கறிஞர், போலீஸ் அதிகாரிகள், பொறியியலாளர்கள், வர்த்தகப் பிரமுகர்களும் தங்கள் பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளிக்கு அனுப்ப ஆர்வம் காட்டுகின்றனர். இந்த மாற்றத்திற்கு யூ.பி.எஸ்.ஆர் தேர்வு முடிவு ஒரு காரணம் என்றால் மிகையாகாது. மலாய், ஆங்கிலம் ஆகிய பாடங்களைத் தவிர்த்து கணிதம், அறிவியல் ஆகிய பாடங்களை ஆங்கிலத்தில் பயில்வதால் தமிழ்ப்பள்ளிக்குப் பிள்ளைகளைப் பெற்றோர்கள் தயக்கமின்றி அனுப்பி வைக்கின்றனர்." (மக்கள் ஓசை, 6.1.2005-12.1.2005, பக்கம்:1)*

*தமிழ்ப்பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை உயர்வுக்கு இச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இரு காரணங்களும் ஏற்புடையவையாகும். எந்தப் பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் சிறந்த அடைவு நிலையைப் பெற வேண்டும் என்றே விரும்புவர். நல்ல அடைவுநிலையைப் பெறும் பள்ளிகளுக்கே தங்கள் பிள்ளைகளை அனுப்பவும் விரும்புவர். தமிழ்ப்பள்ளிகளில் அறிவியலும் கணிதமும் ஆங்கிலத்தில் கற்பிக்கப் படுவதால் இந்தியப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளிகளுக்கு அனுப்ப முன்வருவதிலும் காரணமுண்டு. இந்நாட்டின் கல்வி வரலாற்றைப் புரட்டினால் மிகச் சிறந்த ஆங்கில ஆசிரியர்களாக விளங்கியவர்கள், விளங்கி வருபவர்கள் இந்தியர்களே என்ற உண்மையை உணரலாம். தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களின் அர்ப்பண உணர்வினையும் இவர்கள் உணர்ந்துள்ளனர். அதனால், இயல்பாகவே வீட்டில்*

ஆங்கிலத்தைப் பயன்படுத்தும் நடுத்தர வர்கத்தினர் ஓரளவேனும் தங்கள் பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளிகளுக்கு அனுப்ப முன் வருகின்றனர். அதுமட்டுமல்லாது தமிழ்ப்பள்ளியில் தேர்வுக்கான முக்கியமான பாடங்களுள் தமிழைத் தவிர மற்ற பாடங்கள் அனைத்தும் மலாய் மற்றும் ஆங்கிலத்தில் கற்பிக்கப்படுகின்றன. இதனால் தமிழ்ப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் மற்ற மொழியைக் கற்கும் அதே வேளையில் தாய்மொழியான தமிழைக் கற்கும் கூடுதல் வாய்ப்பையும் பெற்றுளளனர் என்பதனை உணர்கின்றனர்.

இத்தகைய மாணவர் எண்ணிக்கை உயர்வானது பெரும்பாலும் நகர்ப்புறங்களிலேயே அதிகமாக நடைபெறுகிறது. பொதுவாக தமிழர்களின் மத்தியில் தங்கள் மொழி அழியாமல் காக்கப்படவேண்டும் என்ற விழிப்புணர்வு ஓரளவு ஏற்பட்டுள்ளதோடு நகர்ப்புறங்களில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கையும் கணிசமான அளவு உயர்ந்து வருகிறது என்றே கூற வேண்டும். அதே வேளையில் நகர்ப்புறங்களில் உள்ள பள்ளிகளில் ஓரளவேனும் வசதிகள் உள்ளதால் இந்தியப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் இப்பள்ளிகளுக்கு அனுப்ப முன்வருகின்றனர். எதிர்காலத்தில் நகர்களில் உள்ள பள்ளிகள் அளவில் பெரிய பள்ளிகளாகத் திகழக்கூடும். இப்பொழுதே பல பள்ளிகள் 1000க்கும் அதிகமான மாணவர்களைக் கொண்ட பள்ளிகளாகத் திகழ்கின்றன.

**புறநகர்ப் பள்ளிகளின் எண்ணிக்கை சரிவு காணும் அபாயம்**

நாடு விடுதலை அடையும் வேளையில் 888-ஆக இருந்த தமிழ்ப் பள்ளிகள், ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு, 2007-ஆம் ஆண்டில் 524 பள்ளிகளாக எண்ணிக்கையில் குறைந்துள்ளன. இவ்வெண்ணிக்கை மேலும் குறைவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே காணப்படுகின்றன. சமூக வியூக அற வாரியம் (Yayasan Strategik Sosial) 2003-ஆம் ஆண்டில் மேற்கொண்ட ஆய்வில் 82 தமிழ்ப்பள்ளிகள் 40-க்கும் குறைவான மாணவர்களையே கொண்டுள்ளதை அறிய முடிகிறது. இவற்றுள் 21 பள்ளிகள் 20-க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பள்ளிகளாகும்.

குறைவான மாணவர் எண்ணிக்கையை உடைய பள்ளிகளுள் 81 பள்ளிகள் தோட்டப்புறப் பள்ளிகளாகும். எஞ்சியுள்ள ஒரு பள்ளி பிரேசர் மலையில் அமைந்துள்ள தமிழ்ப்பள்ளியாகும். இதனைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 4: 40 மாணவர்களுக்கும் குறைவான எண்ணிக்கையைக் கொண்ட பள்ளிகள்

| மாணவர் எண்ணிக்கை | பள்ளிகள் எண்ணிக்கை |
|---|---|
| 35 - 40 | 7 |
| 30 - 34 | 19 |
| 25 - 29 | 21 |
| 20 - 24 | 14 |
| 15 - 19 | 10 |
| 10 - 14 | 7 |
| 5 - 9 | 3 |
| 4 - 1 | 1 |
| மொத்தம் | 82 |

மூலம்: சமூக வியூக அறவாரியம்

இப்பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை குறைவதற்கு மேம்பாட்டுத் திட்டங்களும் மக்கள் குடிப்பெயர்வும் முக்கியக் காரணங்களாக விளங்குகின்றன. பல மேம்பாட்டுத் திட்டங்களாலும் வீடமைப்புத் திட்டங்களாலும் தோட்டங்கள் அழிக்கப்படுகின்றன. இதனால் மக்கள் வெவ்வேறு இடங்களுக்கு வேலை தேடிக் குடிப்பெயர வேண்டிய கட்டாயச் சூழ்நிலைகளுக்குத்

தள்ளப்படுவதால் அவர்கள் சிதறுண்டு போகின்றனர். அவ்வாறு அழிக்கப்படும் அத்தோட்டங்களில் பல்வேறு போராட்டங்களுக்கிடையே தமிழ்ப்பள்ளிகளுக்கென சிறிய பரப்பளவைக் கொண்ட நிலங்கள் ஒதுக்கப்படுகின்றன. அங்கு வீடமைப்பு மேம்பாட்டாளர்களால் கட்டப்படும் தமிழ்ப்பள்ளிகள் பெரும்பாலும் வசதிகள் குறைவான பள்ளிகளாகவே விளங்குகின்றன. தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் இடமாக விளங்கிய தோட்டங்கள் புதிய வீடமைப்புப் பகுதிகளாக மாறும்போது அங்குப் பல்வேறு இனத்தைச் சேர்ந்த மக்கள் குடியேறுகின்றனர். அதனால் தமிழ்ப்பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை சரிவு காண்கிறது. தமிழ்மீது உண்மையாகப் பற்றுக் கொண்டவரிகளும் குறைந்த வருமானத்தைப் பெறுவோரும் சிறிய எண்ணிக்கையாலான நடுத்தரவருக்கத்தினருமே பல்வேறு சிக்கல்களுக்கிடையே இப்படிப்பட்ட தமிழ்ப்பள்ளிகளுக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்புகின்றனர்.

தோட்டமே உலகம் என வாழ்ந்து வந்த இந்தியர்களுக்கு வருமானப் பற்றாக்குறையும் அவர்களைப் குடிப்பெயரத் தூண்டும் மற்றொரு காரணமாகும். நாடு துரித வளர்ச்சியடைந்து வரும் வேளையில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதற்கேற்ற வகையில் உயர்வடைவதாக இல்லை. இதனால், தோட்டங்களையே நம்பி வாழ்ந்து வந்த இந்தியர்கள் நகர்ப்புறங்களுக்குக் குடியேறுவதோடு வேறு தொழில்களை நாடிச்செல்கின்றனர். இந்நிலையால் தோட்டப்புறப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை பெரிதும் சரிவு கண்டு வருகிறது. ஆகவே, இத்தகையச் சூழலில் எதிர்காலத்தில் தோட்டப்புறங்களில் உள்ள பள்ளிகளுள் பல மூடப்படலாம்.

அரசாங்கத்தால் புதிய தமிழ்ப்பள்ளிகள் கட்டப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றே கூறவேண்டும். புதிய வீடமைப்புப் பகுதிகளில் எல்லா வசதிகளையும் கொண்டு தேசியப்பள்ளிகளே கட்டப்படுகின்றன. மூடப்படும் தோட்டப்புறப் பள்ளிகளின் உரிமங்களைப் (லைசன்ஸ்களைப்) பயன்படுத்தித் தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் பள்ளிகளைக் கட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது சிறந்த வழியாக அமையும். ஆனாலும் அப்பள்ளிகளைக் கட்டுவதற்கான அனுமதியையும் மானியத்தையும் அரசாங்கத்திடமிருந்து பெறுவது எளிதன்று. அரசு மான்யம் கிடைக்காத சூழலில் சொந்த முயற்சியிலேயே அப்பள்ளிகள் கட்டி முடிப்பதற்குப் பெரு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்பள்ளிகளுக்குப் போதுமான மாணவர்களைச் சேர்ப்பதிலும் அயராது உழைக்க வேண்டும். இன்றைய சூழ்நிலையில் சிறிய எண்ணிக்கையிலான மேல் தட்டு இந்தியர்களும் தங்கள் பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளிகளுக்கு அனுப்புவதற்கு முன் வந்துள்ளதைக் காண முடிகிறது. தமிழ்ப் பள்ளிகளுக்கும் தேசியப்பள்ளிகளுக்கும் அனுப்புவதைக் காட்டிலும் சீனப் பள்ளிகளுக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்பி வைக்க விரும்பும் இந்தியர்களும் இருக்கவே செய்கின்றனர். சீனப்பள்ளிகளில் பயிலும் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை 2004-ஆம் ஆண்டில் 8364ஆக இருந்தது.

**அரசு கொள்கையும் தமிழ்ப்பள்ளிகளும்**

மேம்பாட்டுத் திட்டங்களால் பாதிப்பிற்கு உள்ளான தோட்டத் தமிழ்ப்பள்ளிகளுக்கு மேம்பாட்டாளர்கள் நிலங்களை ஒதுக்கித் தந்தாலும் அந்நிலங்களில் அரசின் முழு மானியம் பெற்ற (Sekolah Kerajaan) தமிழ்ப்பள்ளிகளைக் கட்டித் தர அரசு ஆர்வம் காட்டுவதில்லை. பல இடங்களில் இந்நிலையில் உள்ள பள்ளிகள் அரசாங்க பகுதி மானியம் பெற்ற (Sekolah Bantuan Kerajaan) பள்ளிகளாகவே விளங்குகின்றன. நாடு விடுதலை அடைந்து 50 ஆண்டுகள் ஆகிய பிறகும் இந்நாட்டில் உள்ள 524 தமிழ்ப்பள்ளிகளுள் 92 பள்ளிகள் மட்டுமே அரசின் முழு மானியம் பெற்ற பள்ளிகளா விளங்குகின்றன. எஞ்சியுள்ள 433 தமிழ்ப்பள்ளிகள் அரசாங்க பகுதி மானியம் பெற்ற பள்ளிகளாகவே திகழ்கின்றன. இதனால் இப்பள்ளிகள் தேசியப்பள்ளிகளைப் போன்று சிறந்த கட்டட வசதிகளையும் பிற வசதிகளையும் பெற்றுத் திகழ வாய்ப்பில்லாமல்

*போய்விடுகிறது. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். கல்வி கற்பதற்கான சிறந்த சூழல் இல்லாமலேயே இம்மாணவர்கள் தங்களுடைய ஆறு ஆண்டு கால தொடக்கக்கல்வியை முடிக்கின்றனர். அத்தகைய சூழலிலும் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் சிறந்த தேர்ச்சியைப் பெறுவது பாராடுக் குரியதாகும். அரசு நினைத்திருந்தால் எல்லாத் தமிழ்ப்பள்ளிகளையும் முழு மான்யம் பெற்ற பள்ளிகளாக மாற்றியிருக்கக் கூடும். ஆனால், அது அவ்வாறு நடக்கவில்லை. தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கு மற்ற பள்ளிகளைப் போன்று வசதிகள் வழங்கப்படுமாயின் மேலும் சிறந்து விளங்குவர் என்பது திண்ணமாகும். பரவலாக வசதிப் பற்றாக்குறை நிலவுவதைத் தமிழ்நாளிதழ்கள் சுட்டிக்காட்டத் தவறியதில்லை.*

*அரசாங்கம் எல்லாப் பள்ளிகளையும் தேசியப் பள்ளிகளாக்கும் கொள்கையில் உறுதியாக உள்ளது என்பதை உணர முடிகிறது. அதே வேளையில் தேசியப் பள்ளிகளை எல்லா வசதிகளையும் கொண்ட சிறந்த பள்ளிகளாகத் திகழச் செய்து எல்லா இன மாணவர்களையும் ஈர்க்கப் பெரும் திட்டத்தைக் கொண்டுள்ளது என்பதும் உண்மையே. நாடு விடுதலை பெறுவதற்கு முன்பிருந்தே ஒரு பயிற்றுமொழி பள்ளிகளை உருவாக்குவதையே (பாரின்ஸ் அறிக்கை, 1951) முதன்மை நோக்கமாகக் கொண்டிருக்கும் அரசின் எண்ணம் தற்பொழுது 'சிறப்பு மிக்க தேசியப்பள்ளிகள்'* (Memperkasakan Sekolah Kebangsaan) *கொள்கையின் கீழ் மேலும் வலுப்பெற்றுள்ளது. இதற்கு ஒன்பதாவது மலேசிய திட்டத்திற்கான கல்வி மேம்பாட்டு முதன்மைத் திட்டம்* (Plan Induk Pembangunan Pendidikan 2006-2010) *சிறந்த சான்றாகும். இதற்கு மற்ற காரணங்களும் உள்ளன. தேசியப்பள்ளிகளுக்கு மற்ற இன மாணவர்களை ஈர்ப்பதில் முழுமையாக வெற்றிப் பெறாத நிலையில் 100,000-ற்கு மேலான பூமிபுத்ரா மலாய் மாணவர்கள் சீனப் பள்ளிகளில் பயின்று வருவது அரசாங்கத்திற்குக் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு நிகழ்வதற்குத் தேசியப் பள்ளிகளில் நிலவும் குறைபாடுகளும் முக்கியக் காரணமாக இருக்கலாம். தங்கள் பிள்ளைகளுக்கு எல்லா வசதிகளும் வழங்கப்பட்டுள்ள நிலையிலும் அப்பள்ளிகளின் மீது மலாய்க்காரர்களுக்கும் நம்பிக்கை குறைந்து வருவதையும் இச்சூழல் குறிப்பதாக இருக்கலாம். சீனப்பள்ளிகள் கற்றல் கற்பித்தலிலும் அடைவு நிலையிலும் சிறந்து விளங்குவதாலேயே மற்ற இன மாணவர்களைக் கவரும் ஆற்றல் பெற்று விளங்குகின்றன என்றும் கருதத் தோன்றுகிறது.*

**சோதனைகளைச் சாதனைகளாக்குவோம்!**

*இந்நாட்டில் தமிழ்மொழியும் தமிழ்ப்பண்பாடும் நிலைப்பதோடு தழைத்தோங்க வேண்டுமெனில் தமிழ்ப்பள்ளிகள் சிறந்து விளங்க வேண்டுவது அவசியமாகும். இப்பொழுதும் தமிழ்ப்பள்ளிகள் பெருமளவில் அதைத்தான் செய்து வருகின்றன என்றால் மிகையாகாது. எதிர்காலத்தில் தமிழ்ப்பள்ளிகள் வெறும் கல்வி மையங்களாக மட்டும் விளங்காமல் வலிமை மிக்க தமிழர்களின் சமயம், கலை, பண்பாட்டு மையங்களாகவும் திகழ வேண்டிய கட்டாயச் சூழ்நிலை உள்ளதென்பதை நாம் உணர வேண்டும். இதற்கு ஏற்ற வகையில் இப்பள்ளிகள் பரிணமிக்க வேண்டுவது காலத்தின் கட்டாயமாகும். அவ்வாறு இல்லையெனில் ஒரு இனத்தின் முகவரி தொலைந்துவிடும். மொரிசியர்ஸ், ரியூனியன், தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களைப் போன்ற நிலை இந்நாட்டில் ஏற்படாது என்று இறுமாப்புடன் நாம் இருந்து விடுவது தவறாகும்.*

*தமிழ்க்கல்வி, தமிழ்ப்பள்ளி என்பன தமிழ்ச்சமூகத்தின் உரிமைப் பொருள்களாகும். அந்த உன்னதப் பொருள்களைளை வளமடையச் செய்து பேணிக் காப்பது சமூகத்தின் கையிலேயே உள்ளது. சீனச் சமூகத்தைப்போன்று இனமான உணர்வு மிக்கவர்களாக நாம் திகழ வேண்டும். சுய காலில் நிற்கக் கற்றுக் கொள்ளவேண்டும். தமிழ்க்கல்வி மேம்பாட்டிற்காகத் தமிழ்ச் சமூகம் பிறரை நம்பி இராமல் தம் சொந்த ஆற்றலால் அதனை மேன்மையடைச் செய்வதே சாலச்சிறந்ததாகும்.*

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 7.5% விழுக்காட்டினராக மட்டும் உள்ள இந்தியர்கள் வாக்கு வலிமை இல்லாதவர்களாகத் திகழ்வதால் அரசின் கருணைக்கு வேண்டி நிற்க வேண்டியது அவசிய மாகிறது. இந்நிலையைக் களைவதற்கு இந்தியர்களின் அரசு சார்பற்ற அமைப்புகளும், தொழிலதிபர்களும், செல்வந்தர்களும் பெரும்பங்காற்றுவது அவசியமாகும். அரசியல்வாதிகள் தமிழ்ப்பள்ளிகளைத் தங்களின் அரசியல் தளமாக மட்டும் பயன்படுத்தாமல் தங்கள் பிள்ளைகளை அப்பள்ளிகளுக்கு அனுப்பி முன்னுதாரணத் தலைவர்களாய்த் திகழ வேண்டும். தமிழால் உயர்ந்து, தமிழால் பிழைப்பு நடத்திக்கொண்டிருக்கும் மேல் தட்டு இந்தியர்களும், நடுத்தர வர்கத்தினரும் அவ்வாறே செய்ய வேண்டும்.

மேன்மையுற்ற ஒரு இனத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிப்பவர்கள் ஆசிரியர்களே. உலகமயச் சவால்களை எதிர்கொள்ளும் அதே வேளையில் மொழிப்பற்றும் வளமும் மிக்க மலேசியத் தமிழர்களை உருவாக்குவது தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களின் கடமையாகும். தமிழ்க் கல்வியின் மீது நம்பிக்கை வைத்துத் தங்கள் பிள்ளைகளை அனுப்பும் பெற்றோரின் நம்பிக்கையை வீணடிக்காமல் பார்த்துக்கொள்ளவது தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களின் கடமையாகும். ஆசிரியர்கள் தங்கள் கடமையை உணர்ந்து அறவழியில் செயல்பட்டார்களேயானால் அதுவே இறைவனுக்கு அவர்கள் செய்யும் தொண்டாகக் கருதப்படும். தனி மனித விருப்பு வெறுப்புகளை ஒதுக்கி வைத்து தூர நோக்குச் சிந்தனையோடு ஒன்றித்து ஒரு இனமாகச் செயல்பட்டால் சவால்களைச் சமாளிக்கலாம்; சோதனைகளைச் சாதனைகளாக்கலாம்.

**மேற்கோள்கள்**


இராஜேந்தின். நா., 1992, மலேசியாவில் தமிழ் ஆசிரியர் பயிற்சி, சிங்கப்பூரில் நடைபெற்ற முதல் உலகத் தமிழாசிரியர் மாநாட்டில் படைக்கப்பட்ட கட்டுரை.

கந்தன். அ., 1979, மலேசியாவில் தமிழ்ப்பள்ளியும் தமிழ்க்கல்வியும். சுங்கை சுமுன்: தமிழ் மேம்பாட்டு இயக்கம்.

சுப்பிரமணி.சோ., 1994, மலேசியாவில் தமிழ்க் கல்வி வரலாறு, ஸ்ரீ மலர். கோலாலம்பூர்: ஸ்ரீ கோத்தா ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரி.

முரசு நெடுமாரன், 1997, மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் 1887-1987. கிள்ளான்: அருள்மதியம் பதிப்பகம்.

Abu Zahari Abu Bakar, 1980, Perkembangan Pendidikan di Semenanjung Malaysia, Petaling Jaya: Fajar Bakti.

Arasaratnam.S. 1970, Indian In Malaysia and Singapore. London: Oxford University Press.

Cheah Boon Kheng, 2001, Early Modern History (1800-1940), The Encyclopedia of Malaysia. Kuala Lumpur: Archipelago Press, p.p. 118-119.

Chelliah, D.D., 1948, A History of the Educational Policy of the Straits Settlements: with recommendations for a new system based vernaculars. Singapore: Government Press.

Francis Wong Hoy Kee et, al., 1975, Education In Malaysia. Singapore: Heinemann Education Book.

Kementerian Pelajaran Malaysia, 1961, Laporan Rahman Talib. Kuala Lumpur: Percetakan Kerajaan.

Kementerian Pelajaran Malaysia, 1979, Loporan Jawatankuasa Kabinet Mengkaji Pelaksanaan Dasar Pelajaran. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Kementerian Pelajaran Malaysia, 1996, Akta Pendidikan 1996 (Akta 550) & Peraturan Terpilih. Kuala Lumpur: International Book Service.

Kementerian Pelajaran Malaysia, 2006, Plan Induk Pembangunan Pendidikan 2006-2010 (Edisi Pelancaran). Kuala Lumpur: Bahagian Perancangan dan Penyelidikan Dasar Pendidikan.

Majlis Bertindak Kebangsaan Bagi Sekolah-Sekolah Tamil, 2001, Pelan Induk Sekolah-Sekolah Tamil Abad Ke-2. Kuala Lumpur: Yayasan Stratagik Sosial untuk Institut Kemajuan Pendidikan Maju.

Ministry of Education Malaysia, 1956, Report of The Razak Education Committee. Kuala Lumpur: Government Printers.

Sandhu, K.S., 1969, Indian in Malaya: Some Aspects of Their Immigration and Settlement, Cambridge University Press: London.
Santhiram.R. 1999, Education of Minorities: The Case of Indian in Malaysia. Kuala Lumpur: Child Publication.
Selvakumaran.R. 1994, Indian Plantation Labour in Malaysia. Kuala Lumpur: Abdul Majid and Co. for the Institute of Social Analysis.